இந்த யுத்தம் ரஷியா ஒரு புறத்திலும் இங்கிலாந்து பிரான்ஸுக்கு மற்ருெரு புறத்திலும் நடைபெற்றது. இருமடங்களுக்குள்ள சன்னியாசிகளுக்குள் ஏற்பட்ட சண்டையை இருகட்சியினரும் முறையே ஆதரித்ததால் வெளிப்படையாக யுத்தம் ஆரம்பமாயிற்று. ஆனல் வாஸ்தவத்தில் ரஷியா துருக்கியை விழுங்க ஏற்பாடு செய்ததால் அதை எதிர்க்க வேண்டிவந்தது. ரஷிய அரசனுகிய ஜார்-நிகோலாஸ் I ஒரு நாள் ஆங்கிலஸ்தானிகரைக் கூப்பிட்டனுப்பினன். அவரிடம் ‘நம் வசம் ஒரு நோயாளி இருக்கிருன். அத்தியாவஸ்தையிலிருக்கிருன். அவன் கிரியைகளையும் சொத்துக்களைப் பங்குபோடுவதைப்பற்றியும் நாம் முன்னடியே ஏற்பாடு செய்ய வேண்டாமா?’ என்ருர். முதலில் ஸ்தானிகருக்கு இதன் மறைப்பொருள் புரியவில்லை. புரிந்த பிறகு ஆட்சேபித்தார். செபாஸ்தபூலின் முற்றுகை, லைட்-பிரிகேட் (Light Brigade), ஹெவி-பிரிகேட் குதிரைப்படைகளின் வீரதாக்குதல்கள், இதில் பிரசித்தம். இருதரத்தாருக்கும் தெளிவாக ஜயம் ஏற்படவில்லை. துருக்கியை ஒருவரும் தாக்குகிறதில்லை என்று வல்லரசுகள் ஒப்பந்தம் செய்தன. தன் கிறிஸ்துவ பிரஜைகளுக்கு சீர்திருத்தங்களும் மத சுதந்திரமும் அளிப்பதாக சுல்தான் வாக்குக் கொடுத்தான். ருமேனியா விடுதலையடைந்தது. கருங்கடல் நடுநிலைமையானது. அதில் ரஷியா யுத்தகடற்படை வைக்கிறதில்லை என்று ஏற்பாடாயிற்று.

பெர்லின் சமாதானம்—1878.

22 வருஷங்கள் சென்றன. பல்கேரியாவும் இன்னும் சில தேசங்களும் துருக்கியிலிருந்து வெளிக்கிளம்பவேண்டி கிளர்ச்சிசெய்தன. துருக்கியர்கள் பல்கேரியப்படுகொலைகளை நடத்தினர். இங்கிலாந்தில் பிரதம மந்திரி டிஸ்ரலி என்னும் எப்ரேயர். அவருக்கு முன்னும் பின்னும் பிரதம மந்திரியாயிருந்த கிளாட்ஸ்டன் ‘துருக்கியர்களை ஐரோப்பாவை விட்டு சாமான் சட்டுடன் விரட்ட வேண்டும்’ என்று பிரசாரம் செய்தார். துருக்கியர்கள் மீது ரஷியா படையெடுத்து அதை தோற்கடித்து ஸான்ஸ்டெபானே ஒப்பந்தத்தை (Treaty of San Stefano) அதன் தலையில் கட்டியது. அது துருக்கியை சின்னபின்னமாக்குவதாயிருந்தது. டிஸ்ரலி ரஷியாவை யுத்த ஸன்னஹங்களால் பயமுறுத்தி பெர்லினில் ஒரு கூட்டம் கூடி, பெர்லின் சமாதானத்தை 1878-ல் முடித்தார். அதன்படி (1) ருமேனியா, ஸர்வியா, மான்டினீக்ரோ சுதந்திரமடைந்தன. (2) ஆஸ்ட்ரியாவுக்கு தென்கிழக்கிலுள்ள பாஸ்னியா, ஹெர்ஸிகோவின, துருக்கி தலைமையின் கீழ் ஆஸ்ட்ரியாவிடம் விடப்பட்டன. (3) இங்கிலாந்து ஸைப்ரஸ் (Cyprus) தீவைப் பெற்றது. டிஸ்ரலி கௌரவத்துடன் சமாதானத்தைக்கொண்டு வந்திருப்பதாகக் கூறினர். கதையை இங்கேயே துயர்ந்தேத்தியாக கூறுவோம். 1908-ல்

பல்கேரியா சுதந்திரம் அடைந்தது. அதே வருஷத்தில் பாஸ்னியா, ஹெர்ஸிகோவினுக்களை ஆஸ்ட்ரியா சேர்த்துக்கொண்டது. ஐரோப்பாவில் தன் கிறிஸ்துவ நாடுகளில் பெரும்பான்மையை துருக்கி இழந்தது.

ஆபிரிக்காவில் துருக்கி சாம்ராஜ்யத்தின் அழிவு.

1850-லிருந்து ஐரோப்பிய நாடுகள் வடஆபிரிக்காவில் துருக்கி சுல்தானுக்குச் சொந்தமான தேசங்களைப்பிடுங்க ஆரம்பித்தன. பிரான்ஸ் அல்ஜீரியாவுடன் ஆரம்பித்தது. 1882-ல் இங்கிலாந்து எகிப்தை எடுத்துக்கொண்டது. இதன் பின் துருக்கிக்கு ஆபிரிக்காவிலிருக்கும் நாடுகளில் எந்தெந்த தேசம் எதை எதை எடுத்துக்கொள்வது என்பதில் பலமாத்ஸர்யங்கள் ஏற்பட்டன. அதில் சச்சரவுகளை விலக்குவதற்காகவும் பலரகசிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அவைகள் 1911-ல் துருக்கித்தலையில் வந்து விடிந்தன. 1911-ல் பிரான்ஸ் மொராகோவை பிடித்தது. இதாலி மிகுந்த சிரமத்தின்பேரில் தற்கால லிபியாவைப் பிடித்ததுடன் ஆசியா மைனர் பக்கத்திலிருக்கும் டோடிகானீஸ் தீவுகளையும் பிடித்தது. ரஷியா சந்திகளை திறக்கவேணுமாய் வற்புறுத்திற்று. துருக்கி அதற்கு மறுத்தது.

லாஸேன் முதல் உடன்படிக்கை—அக்டோபர் 1912.

ரஷியா கோபங்கொண்டு பால்கன்ஸ் நாடுகளை ஒரு சங்கமாகச் சேரச் செய்து துருக்கி மீது போரிடச்செய்தது. துருக்கி இதாலிக்கு கீழ்படிய வேண்டியதாயிற்று. லிபியா இதாலியைச் சேர்ந்தது என்பதை துருக்கி அங்கீகரித்தது. டோடிகானீஸ் தீவுகளை இதாலி காலிசெய்துவிடுவதாக வாக்குக்கொடுத்தது. ஆனால் இதை இதாலி ஒரு பொழுதும் நிறைவேற்றவில்லை. அதில் இதாலி பல கோட்டை கொத்தளங்களை அமைத்து விட்டது. இந்த யுத்தத்தில் அது தற்பொழுது முக்கியஸ்தானம் வகித்து வருகிறது.

1912 உடன் துருக்கிக்கு ஆபிரிக்காவிலிருந்த சாம்ராஜ்யம் அற்றது.

பால்கன் யுத்தம்.

துருக்கியின் நீண்ட சரித்திரத்தில் இது ஒரு விந்தை: அடிக்கடி அது மீளமுடியாமல் ஒழிந்தது என்று உலகம் நினைக்கும் நிலைமைக்கு அது உள்ளாகிவிடும். ஆயினும் அது ஆச்சரியப்படும்படி பிழைக்கும். அதற்கு எங்கிருந்தாவது தெய்வீகமாக ஒத்தாசை கிடைக்கும். பால்கன் யுத்தத்தில் அப்படியே. அச்சங்கம் துருக்கியை முறியடிக்கிறது. பல்கேரியா இதில் முகான்மை. ஏட்ரியா நோபிளைப் பிடித்தது. கான்ஸ்டான்டிநோபிள் வாசலண்டை வந்து நின்றது. வல்லரசுகள் லண்டனில் ஒரு கூட்டம் கூடி பேரம் பேசினார்கள். பல்கேரியா மிகுந்த கர்வம் கொண்டு ஏஜியன் கடலிலுள்ள ஸலோனிகா துறைமுகத்தைக்கேட்டது. பால்கன் சங்கத்தார் அதை கிரீஸுக்கு அளித்தனர். சங்கத்து இதரர்களுக்கும் பல்கேரியாவுக்கும் சண்டை ஏற்பட்டது. இதற்குள்ளாக துருக்கி தைர்யமடைந்து தானிழந்த நகரங்களைக்கைப்பற்றிற்று.

1914-ம் ஹு மகாயுத்தம்.

மகா யுத்தத்தில் துருக்கி இங்கிலாந்துடன் நெடுநாள் உறவைவிட்டு, ஜெர்மனி பக்கம் சேர்ந்தது. அதற்கு முகாந்திரங்கள் :—

(1) யுத்தமுடிவில் இங்கிலாந்து, இதாலி எப்படியாவது டோடிகானீஸை விட்டு வெளியேறவேண்டுமென்று கியாஸ், மிடிலீனி இரண்டு தீவுகளை கிரீஸுக்கு அளிக்கும்படி வற்புறுத்தியது. அவைகளால் தன் தற்காப்புக் குறையும் என்று துருக்கி மறுத்ததுடன், இங்கிலாந்துமீது சந்தேகமும், விரோதமுங்கொண்டது. (2) இங்கிலாந்து சமீபத்தில் தன் அன்னியநாட்டுக் கொள்கையை மாற்றிக் கொண்டுவிட்டது. முன்போல் தன் ஒத்தாசைக்கு வருவதை விட்டுவிட்டது என்று துருக்கி வருந்தியது. (3) ரகசிய ஒப்பந்தங்களில் இங்கிலாந்து கையெழுத்துச்செய்து, அதுவும் எகிப்தை எடுத்துக்கொண்டதை, துருக்கி மன்னிக்க முடியவில்லை. (4) பால்கன்ஸ், இதாலி, ரஷியா இவைகளுக்கிடையே துருக்கி அகப்பட்டுக்கொண்டிருப்பதாகவும், அதிலிருந்து காப்பாற்ற முன் உதவிபுரிந்த இங்கிலாந்தை நம்பமுடியாதென்ற உணர்ச்சி துருக்கியில் பரவிற்று. (5) ஜெர்மனி இக்காலத்தில்தான் கெய்ஸர் வில்லியமின் கீழ் துருக்கியுடன் சமாதானம் செய்து கொண்டு பெர்லினிலிருந்து பாக்தாத்வரை ரயில் பாதைபோட்டு, முதலில் சமாதானமாகவும், பிறகு அவசியமானல் பலாத்காரமாகவும் அராபிக்கடல்வரை தன் செல்வாக்கைப் பரவுகிறது என்ற பெருங்கனவுகளைக் காண ஆரம்பித்தது ஜெர்மனிக்கு மத்தியரைக் கடலில் யாதொரு அபிலாஷையும் இல்லை என்று துருக்கி நினைத்து ஜெர்மனி உறவாட ஆரம்பித்தபொழுது துருக்கி அதை நெருங்கி அதனுடன் ஒப்பந்தம் செய்தது.

துருக்கி யுத்தம்.

மகாயுத்தம் ஆரம்பித்த 3மாதத்திற்குப் பிறகு, அதாவது 1914 அக்டோபரில் துருக்கி யுத்தத்தில் இறங்கிற்று. அவ்வருஷம் ஆர்மீனியாவில் அது ரஷியாவிடமும், ஸூயஸில் ஆங்கிலேயரிடமும் தோல்விகளடைந்தது. 1915-ஹு ஆங்கிலேயர் டார்டனல்ஸைப் பிடிக்கமுயன்று முடியவில்லை. 1916-ம் ஹு ஜெர்மானியர்கள் அனேக இருப்புப்பாதைகளைப் போட்டு, துருக்கிப் படைகளையும் தாங்களே நிர்வகித்து நடத்தினர்கள். 29—4—16ல் கூட் என்னும் நகரை அதிலிருந்த டவுன் ஷெண்ட் என்பவருடன் துருக்கியர்கள் பிடித்தார்கள். ஆனல் 1916-ம் ஹு பின்பகுதியிலிருந்து துருக்கியர்களின் அதிர்ஷ்டம் விட்டது. அராபியா சுதந்திரம் கொண்டாடியது. இந்தியத் துருப்புகளைக்கொண்டு ஜெனரல் ஆலன்பி வெற்றி பெற்ருர். 1918 அக்டோபரில் துருக்கி சமாதானம் கோரியது.

ஸெவர்ஸ் உடன்படிக்கை.

யுத்தத்தின்பொழுது நேசதேசங்களாகிய இங்கிலாந்து, பிரான்ஸ், இதாலி, கிரீஸ், ரஷியா, துருக்கியை எப்படி பங்குபோட்டுக்கொள்ளுவதென்று அனேக ரகஸிய ஒப்பந்தங்கள் செய்துகொண்டது சகஜம். அவைகளின்படி யுத்தக் கட்டாயத்தால் சந்திகள், இங்கிலாந்தின் அந்நியநாட்டுக்கொள்கையை அழித்து

ரஷியாவுக்குப் போயிருக்கும். யுத்தம் முடியுமுன் ரஷியா தோல்வியடைந்து ஜாரை ஓட்டி பொதுவுடைமையில் இறங்கி யுத்தத்திலிருந்து வெளியேறியது துருக்கியைக் காப்பாற்றியது. பரஸ்பர பொறுமையால் சந்திகளை ஐக்கிய அமெரிக்காவுக்குக் கொடுப்பதென்று தீர்மானித்தார்கள். ஆனால் அது ஐரோப்பாவின் சிக்கல்கள் தனக்கு வேண்டாமென்று மறுத்தது. 10—8—20ல் ஸெவர்ஸ் சமாதானப்படி சந்திகள் சர்வதேசக் கமிட்டியின் பார்வையில் வைக்கப்பட்டன. கான்ஸ்டான்டிநோபிளும், அதைச்சுற்றிய பிரதேசமும் துருக்கியிடம் விடப்பட்டது. கிழக்கு திரேஸும் ஸ்மர்னாவும் துருக்கியிலிருந்து விலகின.

கெமால்பாச்சாவும், லாஸென் 2-வது உடன்படிக்கையும், 24—7—23.

மேற்கண்ட உடன்படிக்கை பிறந்தபொழுதே அது இறந்தது. ஏனெனில் துருக்கியை உத்தாரணம்செய்ய விதி அனுப்பிய புருஷன், கெமால்பாச்சா, துருக்கியில் தோன்றி, அற்புதங்களை செய்துவந்தான். துருக்கியர்கள் எப்பொழுதும் நல்ல போர்வீரர்கள். தோல்வியால் தளர்வுற்றிருந்த அவர்களை அணிவகுத்து பயிற்சிசெய்து உற்சாகமளித்து, தன் நாட்டைக் கவர்ந்துகொண்ட சத்துருக்களை ஓட்டினான். பிரெஞ்சுப்படைகளை மாராஷ் என்னும் இடத்தில் 1920ல் முறியடித்தான். ஆர்மீனியா, ஸ்மர்னா, கிழக்கு திரேஸ், சந்திகள் இவைகளை மீண்டும் கைப்பற்றினான். மகாயுத்தமுடிவில் இவனுடன் மறுபடியும் ஸெவர்ஸ் உடன்படிக்கையை நிலைநிறுத்த சண்டைசெய்யமுடியாது, இது பழைய துருக்கி அல்ல, புது துருக்கி என்பதை நேசதேசங்கள் உணர்ந்தன. 24–7–23ல் பழய ஸெவர்ஸ் உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. கிரீஸ், ஆர்மீனியா இவைகளுக்கு அளிக்கப்பட்ட நாடுகள் துருக்கியிடம் விடப்பட்டன. சந்திகள் அவைகளை காபந்தன்னியில் வைத்துக்கொள்ளுகிறதென்ற நிபந்தனையின்பேரில் அதற்கே அளிக்கப்பட்டன.

கெமால் யுத்தத்தில் மேதாவி என்பதை இவ்விதம் உலகமறிய ரூபித்தான்; உளுத்துப்போன ஒரு கிழக்கித்து நாடாகிய துருக்கியை உள் நாட்டு சீர்திருத்தங்கள்மூலம் மேனாடுகளுக்கு ஒப்ப உன்னத நிலைக்குக் கொண்டுவரமுடியுமென்று அதிலும் நிரூபித்ததுதான் கெமாலுக்கு என்றும் அழியாப்புகழ். கீழ்நாட்டுகளின் முன்னேற்றத்தைத்தடுப்பது மதம், சமூகக்கட்டுப்பாடுகள், மூட நம்பிக்கைகள், மேற்கிலிருந்து கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை என்ற கர்வம். அரசியலிலும் மதத்திலும் முட்டுக்கட்டை, அரசனாயிருந்த சுல்தான்; அவர்தான் மதகுரு காலிபும். சுல்தான் ஸ்தானத்தையும், காலிப் ஸ்தானத்தையும் ஒரே அடியில் ஒழித்ததால் பழையகாலத் தளைகள் நீங்கின. துருக்கி புருஷர்கள் பெஜ்குல்லாய் அணிவதையும், ஸ்திரீகள் முகமூடிகள் அணிந்து கோஷாவாக இருப்பதையும் ஒழித்தான். துருக்கி எழுத்து சீன எழுத்தைப்போல் ஒரு பெரும் பூச்சாண்டி. அதை ஒழித்து மேனாட்டாரின் ரோமன் எழுத்துக்களைப் புகுத்தினான். சுருங்கச் சொல்லில், மேனாட்டின் சிலாக்கியமான அம்சங்களைத் துருக்கியைக் கடைப்பிடிக்கச்செய்து,

துருக்கி கீழ்நாடு, ஐரோப்பாவைச் சேர்ந்தது அல்ல. என்ற அபவாதத்தை நீக்கினன். 1938ல் அவன் இறந்தபொழுது துருக்கி வலுத்து, தன்னம்பிக்கையுடனும், தைரியத்துடனும் உலகை நோக்கி நின்றது.

இந்த யுத்தம் வரை.

1923 முதல் 1940-வரை துருக்கி சமாதானத்துடன் வளர்ந்து வந்தது அபிஸீனியா யுத்தத்தின்பொழுது இங்கிலாந்து ஐரோப்பிய தேசங்களை இதாலியை எதிர்ப்பதில் ஆதரிக்குமா என்று கேட்டபொழுது துருக்கி ஒப்புக்கொண்டது. ஜயித்த பிறகு இதாலியின் மிரட்டல்களையும் ஜெர்மனியின் முரட்டுத்தனத்தையும் கண்டு துருக்கி சந்திகளில் கொத்தளங்கள் அமைக்க அனுமதி கொடுக்கவேணுமாய் கேட்டது. இது ரஷியாவின் பாதுகாப்பானதால் அது இதனை ஆதரித்தது. 1936-ல் மாந்ட்ரே மகாநாட்டில் எல்லா தேசங்களாலும் இது அங்கீகரிக்கப்பட்டது. கிரீஸுடன் 1930-லும், பிறகு 1933 ஸெப்டம்பரிலும் துருக்கி பரஸ்பர ஒத்தாசை உடன்படிக்கை செய்துகொண்டது. இந்த யுத்த ஆரம்பத்தில் இங்கிலாந்து கிரீஸை எவர் ஆக்ரமித்தாலும் ஒத்தாசை புரிவதாக உறுதிகூறியது. துருக்கி இங்கிலாந்துடனும் பிரான்ஸுடனும் உடன்படிக்கை செய்துகொள்ளக் கூடாதென்று ஜெர்மனி தடுக்க எவ்வளவோ முயன்றும் அவைகளுடன் ஒப்பந்தங்கள் ஏற்பட்டது. ரஷியா சந்திகளில் தனக்கும் அதிகாரமளிக்க வேணுமாய் துருக்கியுடன் பேரம் செய்யப்பார்த்தது. துருக்கி மறுத்துவிட்டது. பிரான்ஸ் விழுந்தவுடன் இதாலி ஜெர்மனியுடன் யுத்தத்தில் இறங்கி கிரீஸை சமீபத்தில் நிஷ்காரணமாக தாக்கியிருக்கிறது. அதில் இதாலி வெற்றிபெற்று மேற்சென்றால் பழைய பகைவர்களாகிய துருக்கியர்கள் கத்திகளை தீட்டி பழிக்குப் பழி வாங்க காத்துக்கொண்டிருக்கின்றனர்.

துருக்கியின் தற்போதையக் கொள்கைகள்.

பழைய சரித்திரம் நிகழ் சரித்திரத்தை தானகவிளக்கவைக்கும் என்று அதனை விவரித்துக் கூறினேம். யுத்தம் ஆரம்பித்த 1—9—39 முதல் ஒரு வருஷம் அது கிழக்கே வரவில்லை. மறுபடியும் துருக்கியில் ஜெர்மன் ஸ்தானிகராகிய வான்பாபன் சதாப்பறந்தவண்ணமாக இருக்கிறார். அச்சு நாடுகள் மேல ஆசியா, வட ஆபிரிக்காவைப் பிடிக்க ஒரு பெருந்திட்டத்தை வகுத்திருக்கின்றன. படை மார்க்கம் துருக்கி வழியாகத்தான். மேற்கே ஜிப்ரால்டரைப் போல கிழக்கே சந்திகள் ஒரு மர்மஸ்தானத்திலிருக்கின்றன. அச்சின் தந்திரம்—மாறிமாறி மிஞ்சுவதும் கெஞ்சுவதும். சந்திகள் வழியாக அச்சுத் துருப்புகள் யதேச்சையாகப் போகவர வழி திறந்துவிடவேணுமாய் அச்சின் தந்திரம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. கிழக்கு திக்கில் கிரீஸ் எதிர்த்து நிற்பது ஒரு நல்ல சூசனை. அதனிலும் நல்ல சகுனம், கணமொரு மாறுதலடைந்து தலை சுற்றச் செய்யும் நம்பிக்கையில்லாத பால்கன் நாடுகளின் அல்ப ராஜதந்திரங்களின் இடையே, துருக்கியின் உறுதியான கொள்கை. தலைமுறை தத்துவமாக இருந்துவரும் இங்கிலாந்தின் நட்பைவிடேன் என்று அது உறுதிகூறிவிட்டது.

பால்கனில் இன்று துருக்கியின் செல்வாக்கை கவனியுங்கள். அவைகளிடமிருந்து, தனித்தோ ஒன்றுசேர்ந்தோ அதற்கு பயமில்லை. அவைகளிடையே இதன் அதிகாரம் ஓங்கி நிற்கிறது. அவைகள் துருக்கிக்கு அஞ்சி தங்கள் அன்னிய நாட்டு உறவுகளை அதற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொள்ளுகின்றன. இது பல்கேரியா விஷயத்தில் நிதர்சனம். கிரீஸ் இதாலியுடன் மன்றாடிக்கொண்டிருக்கும்பொழுது ஸலோனிகா துறைமுகத்தைப் பிடிக்க பல்கேரியாவுக்கு ரொம்ப இஷ்டம். ஆயினும் எதிரிகள் பக்கத்தில் யுத்தத்தில் இறங்கினால் துருக்கி பல்கேரியாவை தாக்குவதாக பயமுறுத்தியிருக்கிறது. இதனால் பல்கேரியா கப்சிப் என்று இருந்து வருகிறது. இதனால்தான் அச்சு வல்லரசுகள் பல்கேரியாவைத் தாங்கள் அழைக்கவேண்டியதுதான், அது தங்கள் பக்கம் சேரும் என்பது பொய்யாகிவிட்டது.

ஆனால் ஒரு கேள்வி கேட்கலாம்.—கிரீஸுடன் துருக்கி செய்துகொண்ட ஒப்பந்தம் என்ன ஆயிற்று, ஏன் துருக்கி அதன் ஒத்தாசைக்கு இப்பொழுது இறங்கவில்லை? இதற்குக் காரணம் அந்த கபட புருஷன் ஸ்டாலினே. ஒரு தேசத்துக்கும் ரஷியாவின் அந்தரங்கக் கொள்கை புரியவில்லை. துருக்கியை அடுத்திருக்கும் பெரும் வல்லரசு ரஷியாதான். இன்றைய ரஷியா, புரட்சி ஆரம்பித்த 1918 ரஷியாவைப் போலல்ல, 1936 துருக்கியை மாந்த்ரேயில் ஆமோதித்த ரஷியாவைப்போலுமல்ல. அது போலந்தைப் பகர்ந்து, பின்லாந்தை விழுங்கி, பால்டிக்நாடுகளை பயமுறுத்தி, பெர்லினுக்கு நவம்பரில் தனது கமிஸார் உத்தியோகஸ்தர் மாலடாவை அனுப்பியிருக்கும் ரஷியா. புது நாடுகளைப் பிடிக்க, ஜெர்மனியுடன் ரகசிய பேரம் செய்துகொண்டிருந்தால், முதலாவது பலி டார்டனெல்ஸ், பாஸ்பரஸ் ஜலசந்திகளாகத்தானிருக்குமல்லவா? பெர்லினில் நடந்த ரஷியா சம்பாஷணைகளில் துருக்கி கவற்சி கொண்டது. என்ன நடந்ததென்று ரஷியாவைக் கேட்டு தனக்கு பாதகமாக ஒன்றும் நடைபெறவில்லை என்ற உறுதி பெற்றிருக்கிறது. ஆயினும் ரஷியாவின் கொள்கை ஒளிமறைவன்னியில் சந்தர்ப்பவாதமாயிருக்கிறது. ஜெர்மானியர்களும் டான்யூப் நதியிலும், கருங்கடலிலும் இருக்கிறார்கள். இவைகளை அனுவசியமாக விரோதித்துக் கொள்வதோ அவைகளுக்கு அவகாசம் அளிப்பதோ ராஜ தந்திரம் அல்ல. கிரீஸுக்கு ஒத்தாசைக்குப் போனால் துருக்கியின் ஒரு பாகம் காபந்தன்னியில் இவ்விரு ராக்ஷச தேசங்களின் தாக்குதலுக்கு திறந்து கிடக்கும்.

இச்சிக்கலான பிரச்னைகளின் முடிவை உருவகைப்படுத்துவது கடினம். ஆயினும் துருக்கி தன்னிடம் தப்பெண்ணம் கொள்ளக்கூடாதென்று காட்டும் இணக்கமும், பல்கேரியாவை ஜெர்மனி விரட்டாமலிருப்பதும் ஐரோப்பாவில் துருக்கியும் வல்லரசுகளின் அணியில் சேர்ந்துவிட்டதை சந்தேகமன்னியில் நிரூபிக்கிறதல்லவா? காலூன்றி நிற்க முடியாத துருக்கியை இங்கிலாந்து தூக்கி தூக்கி நிமிர்த்தி நிற்க வைக்கவேண்டியிருந்தது; அந்தப் பொறுப்பு அதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அது இன்று நீங்கியது. துருக்கியைக் கண்டு எல்லோரும் மதிக்கிறார்கள். அஞ்சவும் அஞ்சுகிறார்கள். இதனால் மத்திய

கிழக்கின் மூலம் அச்சுவல்லரசுகளின் படையெடுப்பு நிறைவேருமல் தடைப்படலாம். அப்படிக்காளுல் பிறதேச சைன்யங்களுக்குத் தன் தேசத்தின் சந்திக்கதவுகள் மூலம் வழி விடுகிறதா இல்லையா என்ற கடினமான பிரச்னை எழும்பவே எழும்பாது. ஆனல் அது எழுந்து, தான் நாடாத சண்டைக்கு துருக்கி வலுவில் இழுக்கப்பட்டால் அச்சுவல்லரசுகளுக்கு ஒரு ஆச்சரியத்தை விளைவிக்கப் போகிறது; அதுவும் கிரீஸ் விளைவிப்பதைவிடப் பெரிதாக இருக்கப் போகிறது; ஒருக்கால், ஆச்சரியங்கள் நிறைந்த தன் வாழ்வில் தானே அனுபவிக்காத ஆச்சரியமாக இருந்தாலும் இருக்கலாம்.

வார யுத்தச் செய்திகள்.

(28—11—40 லிருந்து 3—12—40 வரை).

அராஜ்யம்.

அச்சு நாடுகளோடு சேர்ந்ததின் முதல் பிரயோஜனம் ருமேனியா பிணக்காடாய்விட்டதுதான். நூற்றுக்கணக்காயும், ஆயிரக்கணக்காயும் கொலைகள் நடப்பதாகச்சொல்லும் செய்தி பொய்யாயிருக்கலாம். ஆனால் 64 ராஜீயக் கைதிகள் ஜிலாவ் ராணுவ ஜெயிலில் கொலையுண்டது பொய்யல்ல. மாஜி மந்திரிகள் சிலரை, ஏமாற்றி பக்கத்திலிருக்கும் காட்டுக்குக் கொண்டுபோய்க் கோடாலிகளால் சித்திரவதை செய்ததும் வாஸ்தவம்தான். குண்டுகளால் சல்லடைக் கண்ணாகத் துளைபட்ட அவர்களுடைய பிரேதங்கள் காட்டில் கிடக்கின்றன. உத்தியோகத்தில் இருந்தபோது ஐரன்-கார்ட் இயக்கத்தை அடக்கியதுதான் அவர்கள் செய்த குற்றம். ருமேனிய அரசரின் தாயார் தேசத்தைவிட்டு வெளியேறிவிட்டாள். அரசர் மைகேல் கைதியைப்போல் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்; எந்த சமயத்திலும் அவரும் ஓடிவிடலாம். இந்த அக்கிரமங்களில் தனக்குச் சம்பந்தமில்லை என்று சொல்லிக்கொண்டு, அமைதிக்கான சட்டங்களைப் பிரசுரித்துக்கொண்டிருந்தாலும், ஜென்ரல் அன்டொனெஸ்குவுக்கும் கலகத்தை நிறுத்தமுடியவில்லை. அராஜ்யம் முற்றிவிட்டது. தேசமே நாசமாய்விடும்போலிருக்கிறது.

ஐரன்-கார்ட் கக்ஷியே இந்த அட்டூழியங்களுக்குக் காரணம். இதெல்லாம் ஜெர்மனியின் சூழ்ச்சியென்றும் தோன்றுகிறது. கலகத்தைக் கிளப்பிவிட்டு, அதை அடக்குவதற்கென்று உட்புகுந்து, ருமேனியாவைத் தனதாக்கிக்கொள்ளும் உத்தேசம் ஜெர்மனிக்கு இருக்கலாம்.

இந்தச் சந்தேகத்துக்கு இடமுமிருக்கின்றது. 1938-ல் ஐரன்-கார்ட் தலைவரான எம்-காட்ரியானுவை ராஜத்துரோகத்துக்காகத் தண்டித்து, சிறையில் அடைக்க, அதிலிருந்து ஓடப்பிரயத்தனம்செய்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். இவருடைய பிரேதத்தை இப்பொழுது எடுத்து, மறுபடியும் விசாரணைகள் நடத்தி, குற்றவாளியல்லவென்று தீர்ப்புச்சொல்லி சவத்தை மறுமுறை அடக்கம் செய்திருக்கிறார்கள். ஹிட்லருடைய அனுதாபத்தைக்காட்ட அவருடைய உத்தியோகஸ்தர்களில் இரண்டுபேர்கள், அதாவது ஆஸ்திரியாவின் தலைவரும், வெளியேறிய ஜெர்மானியர்களின் மேலதிகாரியும் சவத்தைப் புதைக்கும்போது பிரசன்னமாயிருந்தார்கள். ஹிட்லர் அனுப்பிய பூமாலையொன்று பிணக்குழிமேல் போடப்பட்டது. இவைகளிலிருந்து ஐரன்-கார்ட் இயக்கம் மறுபடியும் தலைக்கிளம்பும் என்றும், அதற்கு ஹிட்லரின் சகாயமிருப்பதாகவும் ஊகிக்கவேண்டியிருக்கிறது.

ஜெர்மானியத் துருப்புகள் ருமேனிய, சைன்யங்களைப் பழக்குவதாகச் சொல்லிக்கொண்டு ருமேனியாவுக்குள் வந்திருக்கின்றன. இவைகள் பவனி

போவதை மைகேல் அரசரும், ஜென்ரல் அன்டொனெஸ்குவும் பார்வையிடு வார்களாம்.

மீதியிருக்கும் பால்கன் நாடுகளை நேர்முகமாகப்பேசி சேர்த்துக்கொள்ள முடியாமல்போக, இப்பொழுது ஜெர்மனியானது தனக்கு அடிமைப்பட்ட ஹங்கேரியைக்கொண்டு கலைக்கப்பார்க்கிறது. ஹங்கேரியானது வால் அறுபட்ட நரியைப்போல் யுகோஸ்லேவியாவுக்கு, ஜெர்மனி நட்பை நாட உபதேசம் செய்கிறது. பேருக்கு சுதந்தரமாய் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளுவதைக் காட்டிலும், தானாகவே சுதந்தரத்தைக் குறைத்துக்கொண்டு ஜெர்மன் நேயத்தைத் தேடச்சொல்லுகிறது.

ஆனால் ருமேனிய கலகங்களிலிருந்தும், கிரீஸ் யுத்தத்திலிருந்தும் பல்கேரியா உஷாராய்விட்டது. எதிரியோடு சேராதிருந்தால் ரக்ஷிப்பதாக பிரிட்டனும் வாக்களித்திருக்கிறது. இதிலிருந்து யுகோஸ்லேவியாவையும், துருக்கியையும் சேர்த்துக்கொண்டு, பல்கேரியா புதுக்கக்ஷியொன்றை அமைக்கப் பிரயத்தனப்படுகிறது.

கிரீஸ்.

கிரீஸ் யுத்தம் இப்பொழுது கிரீஸ் தேசத்துக்குள் நடக்கவில்லை. இதாலியருக்குச் சொந்தமான அல்பேனியாவில் நடக்கிறது. ஆக்ரீடா ஏரியை நோக்கி இதாலியர்கள் 60 மைல் அகலத்துக்குப் பின்வாங்குகிறார்கள். கோரிட்ஸாவுக்கு 20 மைல் வடக்கேயுள்ள பொக்ரடாட்ஸ் ஒரு முக்கியமான போர்முனை. அதன் வழியாகத்தான் இதாலியர்கள் பின்செல்லவேண்டும். கடும்போர் செய்து இந்த ஊர் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிரேக்கர்கள் முன்னேற்றம் இனித் தடைப்படுமென்று தோன்றுகிறது. இதாலியத் துருப்புகள் பலப்படுத்தப்பட்டுக் கடுமையாய் எதிர்க்கின்றன. கிரேக்கர்களும் ஜாக்கிரதையாக மெள்ள மெள்ளச் செல்லுகிறார்கள்.

சண்டையாரம்பித்த ஒரு மாதத்திற்குள்ளாக இதாலியத்துருப்புகளின் தலைவரை மூன்று தடவை மாற்றியாய்விட்டது. இப்பொழுது இருப்பவர் படோக்ளியோவென்பவர். இவர் இதாலியத்துருப்புக் கோழையென்று அதில் 7 பேர்களுக்கு ஒருவரை சுட்டுவிடுவதாக அரட்டுகிறாராம். இது உண்மையானால் ஆச்சரியம்தான்; பேத்தனம். இதாலியத்துருப்புகள் சரியாகச் சண்டைசெய்யவில்லை என்பது இதிலிருந்து புலப்படுகிறது. சைன்யத்தில் சில அல்பேனியர்கள் பலவந்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஆயுதங்களை எடுத்து ஓடிவிடுகிறார்கள். இதாலியிலுள்ள பாஸிஸ்ட் கக்ஷிக்காரர்கள் சைன்யம் சரியாகச் சண்டைசெய்யவில்லையென்று அதிருப்திப்படுகிறார்கள். கிரீஸோடு சண்டைக்குப் போனதிலிருந்து பிரிடிஷ் கடற்படையும், விமானங்களும் இதாலிக்கு அருகாமையில் வந்துவிட்டன. ஆபத்து அதிகமாய்விட்டது. இந்த விபத்தைக் கீழ்க்கண்டபடி மிஸ்டர் எல். எஸ். அமரி வர்ணிக்கிறார்:—

"திடீரென்று கிரீஸோடு இதாலி சண்டைக்குப்போனதிலிருந்து ஜெர்மனிக்குப்பெரிய ஆபத்துவந்துவிட்டது. கப்பல் நிலயங்களும், விமான நிலயங்களும் கிரீஸிலும், கிரேக்கத் தீவுகளிலும் இப்போது நமக்குக் கிடைத்துவிட்டன. இனி

கைகலந்து இதாலியைத் தோற்கடிக்கலாம். எதிரிகளுக்குள் இதாலி பலக்குறைவானது. நாம் எகிப்தில் இதாலியர்களை முறியடிக்கும் வரையில் கிரேக்கர்கள் நிலைத்துக்கொண்டால், நாம் கிரீஸுக்குவந்து துருக்கியைக் காப்பாற்றி, பிறகு எதிரியை வயிற்றில் குற்றிக்கொன்றுவிடலாம். எதிரிகள் கட்டுக்கதைகளில் சொல்லப்படும் யாளியைப்போன்றவர்கள். யாளியை முதுகில் குத்தினால் சாகாது. புரட்டி மிருதுவான வயிற்றில் குத்தினால் இறந்துவிடும். ஸீக்பிரீட் அரணானது ஜெர்மனியின் முதுகு ஓடு. இதாலியானது பலமில்லாத வயிறுபோலாகும்."

கடற்சண்டை.

புதன்கிழமையன்று மத்தியதரைக்கடலில் ஸார்டீனியாவுக்கப்பால், ஆர்க்ராயல், பெர்விக், ரினௌன் என்ற பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் இரண்டு பெரிய இதாலிய சண்டைக்கப்பல்களையும், அநேக க்ரூஸர்களையும், நீர்மூழ்கிகளையும் சந்தித்து, ஒரு க்ரூஸரைத் தீப்பிடிக்கச்செய்து, ஒரு நீர்மூழ்கியைக் கவிழ்த்து, மற்றொன்றின் இடுப்பை (பக்கத்தை) ஒடித்தன. ஆர்க்ராயலிலிருந்த விமானங்கள் பறந்துவந்து ஒரு பெரிய லிடோரியா வகுப்புக் கப்பலைத்தாக்கியது. ப்ரன்ஸ்விக் என்ற பிரிடிஷ் கப்பல்மேல் இரண்டு குண்டுகள் விழுந்தபோதிலும் பழுதாகவில்லை. துறைமுகங்களுக்கு ஓடாமல் நின்றிருந்தால் இதாலியின் கப்பற்படை அன்று அதோகதியாய் போயிருக்கும். ரினௌன் என்ற பிரிடிஷ் கப்பல் தன்னால் முடிந்தவரையில் சண்டைக்கிழுத்தது. ஆனால் இதாலியக் கப்பல்கள் புகை மறைவில் ஓடி ஒளிந்தன. இதுதான் நடப்பு. இதை இதாலியர்கள் தங்களுக்குப் பெரிய வெற்றி கிடைத்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதே மாதிரியாக இந்த வாரத்தில் 131,000 டன் நிறையுள்ள பிரிடிஷ் கப்பல்களை அமிழ்த்திவிட்டதாக ஜெர்மானியர்கள் பொய்சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையான நஷ்டத்தை விட இந்தத்தொகை 120 பங்கு அதிகம்.

பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையிலிருந்து இதாலி மிகவும் அவஸ்தைப்படுகிறது. இறக்குமதிகள் 100-க்கு 80-வீதம் நின்றுவிட்டன. விலைவாசிகள் 100-க்கு 40-வீதம் ஏறிவிட்டன. உணவுப்பொருள்களில்லாமல் சீக்கிரத்தில் டோடிகானிஸ் தீவுகள் சரணமடையும்போலிருக்கிறது. லிபியாவுக்குவேண்டிய சாமான்கள் மேற்கு மத்தியதரைக்கடல் வழியாகச் சுற்றிப்போகின்றன. கிரீஸ் யுத்தத்திலிருந்து மத்தியதரைக்கடலின் கீழ்பாகம் இதாலிக்கு அடைபட்டுப்போய்விட்டது.

விமானப்போர்.

இதன் முடிவில் கொடுத்திருக்கும் அட்டவணைகளில் இந்த வாரத்திய விமான எதிர்ப்பு விவரங்களைப்பார்க்கலாம். இந்த வாரத்தில் ஜெர்மனியில் கொலோனிலும், ஹாம்பர்க்கிலும் எதிர்ப்பு அதிகம்; பிரிடனில் லிவர்பூலிலும், ஸௌதாம்ப்டனிலும் எதிர்ப்பதிகம். லண்டனில், ஸேவாய், கார்ல்டன் ஹோட்டல்கள் பழுதாய் விட்டன.

நவம்பர் மாதத்தில் 229 எதிரி விமானங்கள் சேதம்: இவைகளில் 20 இதாலிய விமானங்கள். பிரிடனுக்கு நஷ்டம் 53 : 28 விமானிகள் பிழைத்தார்கள். இதோடு, இதாலியருக்கு மத்தியதரைக்கடலிலும், ஆபிரிக்காவிலும் 57 விமானங்கள் சேதம். பிரிடனுக்கு 18 சேதம்.

தூரக் கிழக்குப் பிரதேசம்.

நாங்கிங்கில் 'பொம்மை' கவர்ன்மெண்டை நடத்தி வரும் வாங்-சிங்-வேயுக்கு 'சீனு-ப்ரெஸிடெண்டு' என்று பட்டமொன்றைக் கொடுத்து அவரோடு ஜப்பான் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது. அதன்படி ஜப்பானும் சீனுவும் பரஸ்பர சகாயத்தைச் செய்துகொண்டு குடி சமத்துவ இயக்கத்தையும் எதிர்க்கும். இந்த உடன்படிக்கை இதர தேசத்தார்களுக்கு சைனுவிலுள்ள உரிமைகளைக் கெடுப்பதற்காகவேயொழிய வேறொன்றுமில்லை. இதிலிருந்து சைனுவுக்குச் சுதந்திரம் கிடைக்காது. ஜப்பான், இஷ்டப்படி, சைனுவில் கப்பல்களையும், சைன்யங்களையும் வைத்துக்கொள்ளும். குடி-சமத்துவமென்றால் ரஷியாவாகும். ஆகையால், இந்த உடன்படிக்கையிலிருந்து ஜப்பான் ரஷியாவோடு நட்புப்பாராட்டவில்லையென்று தெரிகிறது.

மாஞ்சுகுவோ ஒன்றுதான் இந்த உடன்படிக்கைக்குச் சம்மதித்துத் தனது பிரதிநிதியை நாங்கிங்குக்கு அனுப்பியிருக்கிறது. சுங்கிங்கில் இருக்கும் உண்மையான சீன-கவர்ன்மெண்டு சமாதானம் செய்ய நிராகரித்து உலகத்திலுள்ள இதர தேசங்கள் நாங்கிங்கோடு சேர்ந்தால் தனக்கு விரோதிகளாவார்களென்று எச்சரிக்கை செய்திருக்கிறது.

இந்தப் புது அரசாங்கத்தை பிரிடனும் அமெரிக்காவும் ஆதரிக்க வில்லை. இவர்கள் சுங்கிங் கவர்ன்மெண்டை ஆதரித்துப்பலப்படுத்தி ஸிங்கப்பூர், ஈஸ்ட்-இண்டீஸ் பிரதேசங்களைக்காப்பாற்றிக் கொள்வார்கள். சுங்கிங் அரசாங்கத்துக்கு அமெரிக்கா 100-லக்ஷம் டாலர்கள் கடன் கொடுக்கச் சம்மதித்துவிட்டது. இதில் ஒரு பாதி பொதுக்காரியங்களுக்கு உபயோகப்படும்; மற்றொருபாதி நாணய செலாவணிக்கு உபயோகப்படும்.

யாங்க்டிஸி நதியிலிருக்கும் 'இசாங்' துறைமுகத்துக்கு வட-கிழக்கே 160 மைல் விசாலத்துக்கு ஜப்பானியர் படையெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தாய்லாந்தில் வம்பு வலுக்கிறது. அங்கு வசிக்கும் பிரெஞ்சுக்காரர்கள் உடனே வெளியேற உத்தரவு போடப்பட்டிருக்கிறது. நவம்பர் 28-ல் தாய்லாந்தின் கிழக்கு எல்லைப்புறத்தைத்தாண்டி பிரெஞ்சு விமானங்கள் வந்து எதிர்த்தன.

ஜெர்மனி வசமிருக்கும் தேசங்களுடைய கஷ்டநிலை.

1. நார்வே.—மாக்பெத் என்ற ஒரு கொடிய வீரன் அழிவதற்கு முன் ஒரு காடானது நகர்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. அதைப்போல சமீபத்தில் நார்வேயில் மலைகள் பெயர்ந்து கீழே விழுந்தன. நார்வே தேசாபிமானிகள்

ஜெர்மனிக்கு விரோதமாக மலைப்பாறைகளுக்குள் வெடிமருந்தைப் புதைத்துவைத்திருக்கலாம். மழை பெய்தவுடன், மூடிக்கொண்டிருந்த மண் கரைந்து, வெடிகள் வெடித்து, பாறைகளை உடைத்துத்தள்ளிவிட்டன. இதிலிருந்து ஆஸ்லோவிலிருந்து பெர்கனுக்குப் போகும் ரெயில்பாதை பழுதாய்விட்டது.

2. **ஹாலண்ட்.**—இந்த தேசம் பிடிபட்ட முதல் வாரத்திலேயே 8,000 டன் வெண்ணெயை இங்கிருந்து ஜெர்மானியர் கொண்டுபோய்விட்டார்கள். தேசத்திலிருந்த 28,000,000 கோழிகளில் 6,000,000 தான் பாக்கி. நாலிலொரு பங்கு பசுக்களும், எல்லாப் பன்றிகளும் கொன்றுய்விட்டது. புது உலகத் திட்டப்படி ஹாலண்ட் ஜனங்கள் குறைத்துத்தான் சாப்பிடவேண்டுமென்கிறார்கள். காலை போஜனத்துக்குக் கோழிமுட்டை அதிகம், காப்பியும், டீயும் வேண்டாமென்கிறார்கள். அபரிமிதமாய்க் காய்க்கும் இந்தத் தேசத்திலிப்பொழுது காய்கறிகள் திட்டப்படி வினியோகம் செய்யப்படுகின்றன. ஆறு மாதத்திற்கு ஒருமுறைதான் எண்ணெய் ஒரு லிடரும், கொழுப்பு 60 கிராமும் கொடுக்கப்படுவதால் சமையலுக்குவேண்டிய கொழுப்புக்கிடையாது. க்ஷவரம் செய்துகொள்ள நாலுமாதத்திற்கு ஒரு ஸோப்புக்கட்டிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஹாலண்டிலுள்ள சர்வகலாசாலைகளிரண்டு மூடப்பட்டுவிட்டன. கிறிஸ்துமஸுக்குள் மாணவர்கள் சரியாய் நடந்துகொள்ளாவிட்டால் மற்ற கலாசாலைகளையும் மூடிவிடுவோமென்கிறார்கள்.

3. **பிரான்ஸ்.**-பாரிஸ் சர்வகலாசாலையை மூடிவிட்டு, அதில் படித்த 500 மாணவர்களைச் சிறை நிலயங்களுக்கு அனுப்பிவிட்டார்கள். ஸ்வதந்திர பிரெஞ்சு கக்ஷி சார்பாக சமாதானதினத்தைக் கொண்டாடியதுதான் இவர்கள் செய்தகுற்றம்.

4. **பெல்ஜியம்.**—நவம்பர் 13ல் நடந்த லியபால்ட் அரசருடைய இஷ்டதெய்வக் கொண்டாட்டத்தில் சேர்ந்துகொள்ளக்கூடாதென்றும், தேசீயக்கொடியை உபயோகப்படுத்தக்கூடாதென்றும் ஜெர்மானியர்கள் உத்தரவு போட்டார்கள். ஆனால் வைதீகக் காரியங்களை நிறுத்தவில்லை. ப்ரசல்ஸ் சர்வகலாசாலையை ஜெர்மன்வழிக்குக் கொண்டுவருவதற்காக, ஜெர்மன் அதிகாரி ஒருவரை அதற்கு அனுப்பி, ஜெர்மன் உபாத்தியாயர்களையும் நியமித்திருக்கிறார்கள். அங்கிருந்த உபாத்தியாயர்கள் ஜெர்மனிக்கு விருந்தாளிகளாக வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு சமயம் இவர்களைச் சிறை நிலயங்களுக்கு அனுப்பி, அங்கு உபந்நியாஸங்கள் செய்யச்சொல்லலாம்.

அபிஸீனியா.

இதாலியருக்கு விரோதமாகக் கிளம்பும் அபிஸீனியருக்கு பிரிடன் எல்லா விதங்களிலும் உதவிபுரிவதாக நவம்பர் 26ல் காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஆர். எ. எப். பட்லர் கூறினார்.

இந்தியா.

கலாபாத்தைப் பிடித்ததில் இந்தியத் துருப்புகள் வீரத்தனமாய்ச் சண்டை செய்ததை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மெச்சிக்கொண்டிருக்கிறார்கள்.

தேதி. பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
25—11—40. (திங்கட்கிழமை).		
அல்பேனியா (Albania).		
மோட்டார் வண்டிகள், கோவேறு கழுதைகள்.—பின்னடையும் இதாலிய சைன்யம்.	......	பல மோட்டார் வண்டிகள் எரிந்து போயின, கழுதைகள் கொல்லப்பட்டன. சைன்யத்தில் பலர் மாண்டனர்.
மோட்டார் சாமான் வண்டிகள்—டெபலீன் (Tepelene).	......	சேதமாயின.
சாமான் கிடங்குகள்.—ஆர்கைரோக்காஸ்ட்ரோ (Argyrokastro).	நஷ்டமில்லை.	தீப்பிடித்தன.
26—11—40. (செவ்வாய்க்கிழமை).		
ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
பகலில்—விரோதியின் சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.—ப்ரிஸியன் (Frisian) தீவுகளுக்கப்பால்.	நஷ்டமில்லை.	கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.
இரவில்—யுத்த தளவாட உற்பத்தி சாலை, இன்னும் மற்ற முக்கியமான இடங்கள்.—கொலோன் (Cologne).	......	பலத்த சேதம்.
ரயில் பாதைகள்.—பெர்லின் (Berlin) ...	......	சேதமாயின.
கப்பல்கள், கப்பல் நிற்குமிடங்கள்—ராட்டர்டாம் (Rotterdam), ப்ளஷிங் (Flushing), ஆண்ட்வர்ப் (Antwerp) கலே (Calais), புலாயின் (Boulogne)		தவிடுபொடியாக்கப்பட்டன.
கடற்படை நிலயம்.—லோரியன்ட் (Lorient).	......	......
எண்ணெய்த் தொட்டிகள்.—கெண்ட் (Ghent).	......	தீப்பிடித்தன.
கப்பல்கள் டச்சு (Dutch)க் கடற்கரை ...	......	அபாயத்திற்குள்ளாயின.
விமான நிலயங்கள்.—ஜெர்மனி ஆக்ரமித்துக்கொண்டிருக்கும் நாடுகள்.	5 விமானங்கள்.	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
26—11—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	இதாலி (Italy).		
	ராயல் ஆர்ஸினல் (Royal Arsenal)—டூரின் (Turin).	......	தொழிற்சாலை கட்டடங்கள் சேதமாயின.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள், விரோதி சைன்யங்கள் தங்குமிடங்கள்.—கார்நல்க்ரீன் (Garnulgrein), பீர்ஸோபாபி (Birsofafi) ஸிடிஎல்பர்ரானி (Sidi el barrani), மாடலீனு (Maddelena).	...... 1 விமானம்.	...... பலத்த சேதம்.
	ஆராட் (Arat) தீவு.—எரிடிரியா (Eritrea) வின் கடற்கரைக்கப்பால்.	...... 1 விமானம்.	...... 1 விமானம்.
	விரோதி சைன்யங்கள்.—அபிஸீனியா (Abyssinia) விலுள்ள டாங்கிலா (Dangila).	......	...... அதிகச் சேதம்.
	அல்பேனியா (Albania).		
	கப்பல் நிற்குமிடங்கள், விமான நிலயங்கள்.—வலோனு (Valona).	...... 1 விமானம்.	1 பெரிய கப்பல் மூழ்கிற்று. 1 விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டது. கட்டடங்கள் சேதமாயின.
	பின்னடையும் இதாலிய துருப்புகள்.—டெபலீன் (Tepelene) பிரதேசம்	......	......
	விமான நிலயம்.—கெல்ஸைரி.	......	......
27—11—40 (புதன்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	இரவில்.—இருப்புப்பாதைகள், சாமான் கிடங்குகள், ரயில்வே ஸ்டேஷன்கள்,	......	போக்கு வரத்து தடைப்பட்டது.
	ஹோஹன்ஸாலர்ன் பாலம்.—கொலோன் (Cologne).	......	எங்கும் ஒரே தீமயம். பலத்த சேதம்.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
27—11—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), லாஹார் (Lehavre), புலாயின் (Boulogne)	......	...... தகர்க்கப்பட்டன.
	பல விரோதி விமான நிலயங்கள்	1 விமானம்.	சேதமாயின.
	மத்தியதரைக் கடலில் விரோதியின் கடற்படை.		
	இதாலிய கடற்படை.—ஸார்டீனியா (Sardinia).	......	ஒரு பெரிய யுத்தக் கப்பலும் ஒரு சிறிய யுத்தக் கப்பலும் குண்டால் தாக்கப்பட்டன.
	அல்பேனியா (Albania).		
	யுத்த தளவாடங்கள்—அல்பேனியா (Albania)-விலிருக்கும் கிரேக்க சைன்யங்கள்.	......	......
	இதாலிய சைன்யம்—அல்பேனியா	......	நஷ்டம் வெகு அதிகம்.
28—11—40 (வியாழக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	எண்ணெய் உற்பத்தி ஆலை—போலிட்ஸ் (Politz).	......	தீப்பிடித்தது.
	யுத்தக் கப்பல்கள் கட்டுமிடங்கள்—ஸ்டெட்டின் (Stettin).	......	நீர்மூழ்கிக் கப்பல்கள் நாசமாயின.
	ரயில் பாதைகள்—மேற்கு ஜெர்மனி (Germany).	......	சீர்குலைக்கப்பட்டன.
	ராணுவ சாமான்கள்—மெயின்ஸ் (Mainz)	......	தீப்பிடித்தன.
	விமான நிலயங்கள்—காப்லென்ஸ் (Coblenz) இண்ட்ஹோவன் (Eindhoven).	2 விமானங்கள்.	சேதமாயின.
	ரயில்பாதைகள், ஜங்ஷன்கள், பாலங்கள் ரைன் (Rhine)-நதியின் இருகரைகளிலும்.	......	சேதமாயின.

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.		பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
28—11—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.				
	ஸப்மரைன் (Submarine) மிஷின்கள் செய்யுமிடம்—மான்ஹீம் (Mannheim).		......	முற்றிலும் நாசமாயின.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).			
	ஒரு சிறிய விரோதி சைன்யம்—ஸிடி எல் பரானி (Sidi El barrani).		......	மோட்டார் வண்டிகள் சேதமாயின. டிரைவர்கள் கொல்லப்பட்டனர்.
	துறைமுகம்—இத்தாலிய செங்கடல் (Red sea) துறைமுகமான அஸாப் (Assab).		......	ஒரு பெரிய கப்பலின் மேல் குண்டுவிழுந்தது.
	வேவுபார்த்தல்—விரோதியின் நாடுகள்.		......	......
	அல்பேனியா (Albania).			
	இதாலிய சைன்யங்கள் இதர துறைமுகம் ஸாண்டா கொராண்டா (Santa quaranta).		......	பல கப்பல்கள் சேதமாயின.
	இதாலிய நாசகாரிகள்—கார்ப்யூ (Corfu) தீவுக்கருகில் டூராஸோ (Durazzo), எல்பாஸான் (Elbasan).		......	ஓடிவிட்டன.
29—11—40. (வெள்ளிக்கிழமை).				
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.			
	ட்யூட்ஸ்ச்சே (Deustche)-ஷீப் (Schieff), மாஸ்சினேன்பா (Maschinenbau) கப்பற் கட்டுமிடங்கள்.—ப்ரமென் (Bremen).		......	பெரிய தீக்களும் வெடிச் சத்தங்களும் கிளம்பின.
	கப்பல் நிற்குமிடங்கள்.-உள்நாட்டுத் துறைமுகமான கொலோன் (Cologne).		......	தீயால் அதிகச் சேதம் ஏற்பட்டது.
	ஸப்மரைன் (Submarine) நிலயம்.—லோரியன்ட் (Lorient).		......	ஐந்து இடங்களில் தீப் பிடித்தது.
	புலாயின் (Boulogne), லாஹார் (Le-havre).		......	......

தேதி.	பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
29—11—40.	(வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
	பல விரோதி விமான நிலயங்கள்.—	……	……
	இதாலி (Italy).		
	எண்ணெய்த் தொட்டிகள், தென் கிழக்குக் கடற்கரையிலிருக்கும் ஆர்ஸினல் (Arsenal), முக்கிய ரயில்வே ஸ்டேஷன்.—பிரிண்டிஸி (Brindisi).	……	பல இடங்களில் தீப் பிடித்தது. வெடிச் சத்தங்களும் கிளம் பின.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	ராணுவக் கட்டடங்கள்.—ஸிடிஎல்பரானி (Sidi el barrani).	……	……
	ராணுவங்கள் தங்குமிடம்.—பொம்பா (Bomba).	……	தரையில் இருந்த விமானங்கள் நாச மாயின.
	விமான நிலயம்.—(Tessemie).	……	……
	ரயில்வே ஸ்டேஷன்.—கெரன் (Keren).	……	சேதமாயிற்று.
	அரசாங்க காரியங்கள்.—கார்டுல்லா (Gardulla).	……	பல இடங்களில் தீப் பிடித்தது.
	வேவு பார்த்தல்.—கிஸ்மாயு (Kismayu).	1 விமானம்.	1 விமானம்.
	ஜெர்மனி (Germany).		
30—11—40.	(சனிக்கிழமை).		
	இன்று காலநிலை சரியாயில்லாததினால் விமானப் படையெடுப்பு இல்லை.		

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும்.
26—11—40.	(செவ்வாய்க்கிழமை).		
	பிரிடன் (Britain).		
	பகலில்.—ஒரு கடற்கரைப் பட்டணம்.—ஸஸ்ஸெக்ஸ் (Sussex).	……	கட்டடங்களுக்குச் சொற்ப சேதம். சிலருக்குக் காயம்;

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பரல் விளைந்த சேதமும்.
26—11—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	தெற்கு, தென்கிழக்கு கடற்கரைகள் ...	4 விமானங்கள்	நஷ்டமில்லை.
	இரவில்.—லண்டன் (London) ...	......	சொற்ப சேதம்.
	மிட்லண்ட்ஸ் (Midlands), ஹோம் கவுண்டீஸ் (Home Counties)-ல் ஒரு இடம்.	......	காயமடைந்தவர்கள் மிகவும் சொற்பம்.
	கிரீஸ் (Greece).		
	கிராமங்கள்.— எபைரஸ் (Epirus) ...	......	சில பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர்.
	தீவுகள்.—கார்ப்யூ (Corfu), செபலோனியா (Chepalonia).	......	ராணுவ முக்யமான சேதமொன்றுமில்லை.
27—11—40. (புதன்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	இரவில்.—லண்டன் (London), தென் மேற்கு இங்கிலாந்து (England).	......	சில வீடுகளும், கட்டடங்களும் நாசமாமாயின. காயம் பட்டவர்கள் சொற்பம்.
	கிழக்கு ஆங்கிலியா (Anglia), தென் கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland).	11 விமானங்கள்.	மிகவும் சொற்ப நஷ்டம். 2 விமானங்கள்.
	மால்டா (Malta).		
	மால்டா (Malta)	1 விமானம்	1 விமானம்.
	கிரீஸ் (Greece).		
	கிராமங்கள்.—எபைரஸ் (Epirus) கார்ப்யூ (Corfu), செபலோனியா (Cephalonia), க்ரீட் (Crete), பாட்ராஸ் (Patras).	......	பொது ஜனங்கள் கொல்லப்பட்டனர்.
	கிரேக்க விமான நிலயம்.—ப்ளாரினா (Florina).	......	1 விமானம்.
	மத்தியதரைக்கடலிலிருக்கும் பிரிடிஷ் கடற்படை.		
	பிரிடிஷ் கடற்படை.—இதாலிய கடற்படையை எதிர்க்கும் பிரிடிஷ் கடற்படை.	......	இதாலிய விமானங்கள் துரத்தியடிக்கப்பட்டன.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
28—11—40. (வியாழக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	இரண்டு பட்டணங்கள்.—கெண்ட் (Kent) தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம். இரவில்.—மர்ஸிஸயிட் (Merseyside), ஒரு பட்டணம்.—வடமேற்கு இங்கிலாந்து (England).	6 விமானங்கள்.	மிகவும் சொற்ப சேதம். 7 விமானங்கள் தீப்பிடித்தது. வீடுகள் இடிந்தன. சிலர் மாண்டனர்.
	பல இடங்கள்.—தெற்கு இங்கிலாந்து (England).	......	......
	மால்டா (Malta).		
	மால்டா (Malta) ...	... 2 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 2 விமானங்கள் சேதம்.	நஷ்டமுமில்லை; சேதமுமில்லை.
29—11—40. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—தெற்கு லண்டன் (London), தென்கிழக்குக் கடற்கரை.	......	சேதமே இல்லை.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் ஹோம் கவுண்டீஸ் (Home Counties), வேல்ஸ் (Wales), கிழக்கு ஆங்கிலியா (Anglia), தென்மேற்கு கடற்கரைப் பட்டணம்.	5 விமானங்கள்.	சில வீடுகள் சேதமாயின. தீப்பிடித்தது. ஆனல் சீக்கிரம் அணைத்துவிட்டார்கள். சிலருக்குக் காயம். 2 விமானங்கள்; 2 விமானிகளும் பத்திரம்.
	கிரீஸ் (Greece).		
	முன்னணிப்படையில் சில இடங்கள்.— கிராமங்கள், பட்டணங்கள்.—எபைரஸ் (Epirus), ஸெபலோனியா (Cephalonia), ஸாண்டீஸ் (Zantes), லூகாஸ் (Leucas), பெலப்போனீஸஸி (Peloponnesus)-ன் மேற்குக் கடற்கரை.	......	சில பொது ஜனங்கள் மாண்டனர்.

தேதி.	விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதியின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
30—11—40 (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்—துணைக்காவல் கப்பல்கள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), லண்டன் (London) பிரதேசம், கெண்ட் (Kent).	......	விரோதி விமானங்கள் துரத்தியடிக்கப்பட்டன. சொற்ப சேதம்.
	இரவில்—ஒரு தெற்குக் கடற்கரைப் பட்டணம், லண்டன் (London), இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள்.	3 விமானங்கள்	பல கட்டடங்கள் சேதமாயின. 2 விமானங்கள்; 2 விமானிகளும் பத்திரமாய் இருக்கிறார்கள்.
1—12—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	பிரிடன் (Britain)		
	பகலில்—லண்டனி (London)ன் தெற்கில் உள்ள சுற்றுப்புறங்கள், இங்கிலாந்தி (England)-ன் தெற்கு, தென்கிழக்குக் கடற்கரைகள்.	......	நஷ்டமும், சேதமும் இல்லை.
	இரவில்—ஸவுதாம்டன் (Southampton) பிரதேசம், லண்டன் (London), ஹோம் கவுன்டீஸ் (Home Counties), தெற்கு இங்கிலாந்தி (England)-ல் சில இடங்கள்.	8 விமானங்கள்	பலத்த சேதம்; பல இடங்களில் தீப் பிடித்தது; பலருக்குக் காயம். வெகு சொற்ப சேதம். 5 விமானங்கள். எல்லா விமானிகளும் பத்திரம்.

யுத்தக் குறிப்புகள்.

சரியான சிப்பாய்கள்.

சென்ற மகாயுத்தத்தில் நான் துருக்கியர்களுடன் சண்டை போட்டதும், அவர்கள் எவ்வளவு தேர்ந்த போர்வீரர்களென்பதும், இந்தப் பத்திரிகையின் பிரதம விஷயமானது எனக்கு ஞாபகமூட்டுகிறது. வயிற்றில் ஒன்றுமேயில்லாமல் போர்களத்திற்குச் சென்று போர் புரிவார்கள்! என் சொற்ப அனுபோகத்திலேயே எனக்குத் தெரியும், அவர்களில்ஒரு முழுப்படை—12,000 பெயர்கொண்டது—அவர்கள் விமானங்கள் நமது விமானப்படையால் சிதறப்பட்டு கண்ணிழந்த பிராயமாய் செய்யப்பட்டு, நமது தற்போது இந்திய ராணுவ பிரதம தளகர்த்தர் தலைமையின் கீழ் ஒரு குதிரைப்படையால் விலாப்பக்கம் வியாபிக்கப்பட்டு, அராபியர்களும் கர்ட் ஜாதியாரும் நிறைந்த பிரதேசம் வழியாக வெகுதூரம் போகவேண்டியதால் அரைப்பட்டினியாக இருந்துகொண்டு ஒரு மலைத்தொடரிலிருந்து இறங்கி, பாலைவனம் வழியே சுமார் 40 மைல் தூரம் நடந்துசென்று, அதுவும் மனிதர்கள், குதிரைகள், பீரங்கிகள் எல்லாம் 30 மணி நேரத்தில் அப்படிச்சென்று, அதன் இறுதியில் மூன்றுநாள் வரை தீரத்தன்மையுடன் போர் புரிந்தார்கள். ஆம், இன்னுமொரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. துருக்கியர்கள் தஞ்சமடைந்து அவர்கள் சாமான்களை எங்கள் வசம் ஒப்புவிக்கும்போது, பால்யமும் லக்ஷணமும்பொருந்திய ஒரு உத்தியோகஸ்தரைப் பார்த்தேன். களைப்பாலும் பசியாலும் கன்னம் ஒட்டிப்போயிருந்தது; ஆயினும் துப்பாக்கியை என் வசம் கொடுக்கும்படி நான் கேட்டபோது, வெகு மரியாதையாய் நடந்துகொண்டான். பூதக்கண்ணாடியை கேட்டேன், களைத்த புன்னகையுடன் பையிலிருந்து அதை சடேரென்று எடுத்து பக்கத்திலிருந்த ஒரு குன்றின்பேரில் எறிந்து துண்டு துண்டாய் உடைத்துவிட்டான். ரோஷம் மட்டும் குறையவில்லை. அதே மாதிரி இன்னுமொரு துருக்கி உத்தியோகஸ்தரைக் கண்டேன். எங்களை இரண்டு நாளாய் வருத்திய ஒரு கனமான யந்திர பீரங்கி நாங்களிருந்த இடத்திற்குக் கீழே ஒரு பள்ளத்தில் சாய்ந்திருக்க, அதன் கீழ் அந்த உத்தியோகஸ்தர் கிடந்தார். அவர் பேரில் காயமில்லை, ஆயினும் வயிற்று வலியாலும் களைப்பாலும் செத்துக்கிடந்தார். ஆயினும் சாகும்வரை, ஒரு கை முழம்போட்டதுபோல், தன் இனத்தார் இருந்த இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலிருந்துகொண்டு இரண்டு நாள்வரை தன் பீரங்கியை தனிமையில் வேலை வாங்கிக்கொண்டிருந்து கடைசியாக இறந்தார்.

இதெல்லாம் கவனிக்க, துருக்கியர் 'ஜாக்கிரதை' என்று தாக்கீது செய்வதைக் கேட்டு பல்கேரியர்கள் யோசிக்கிறார்கள் என்றால், அதிலென்ன ஆச்சர்யம்? பல்கேரியர் மட்டுமா, ஜெர்மானியர்கூட அப்படியேதான்.

பெர்லின் மாலடாவ் விஜயம்.

இந்த விசித்திரச் சம்பவத்திற்கு ஒரு அர்த்தம் கொடுக்கலாம். அதாவது, ஹிட்லருக்கு உபத்திரவம் அதிகரிக்கிறதென்பதற்கு இது ஒரு அடையாளம். இது சரியான அர்த்தமாகவும் இருக்கலாம். உலாந்தா, பெல்ஜியம் கடற்கரைத் துறை முகங்களிலும் வெற்றியடைந்தபின், ஜெர்மானியர் தைரியம் கைவிடாதிருக்கும் விதமாக வெற்றிகள் ஒன்றையும் காணோம். ஜெர்மன் விமானப்படையின் கையாலாகாத்தன்மையென்ன, பிரிடிஷ் கடல் முற்றுகையின் கடுமையென்ன பிரிடிஷ் விமானப்படை படுத்தும் பாடென்ன, வியாபார வசதிகள் சம்பந்தமாக ரஷியாவிற்குள்ள குறைவுகளென்ன, இவையெல்லாமாகச் சேர்ந்து ஜெர்மன் நாய் வாலை சுருட்டிக்கொள்ளும்படி செய்துவிட்டன. ரூஸ்வெல்ட் தேர்ந்தெடுக்கப் பட்டது ஹிட்லரை திடுக்கிடச் செய்தது. அவர் பழைய நண்பனை கனம் பெனிடோ முஸோலினியின் பிரபாவங்களைப்பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதை அறிய வெகு ஆசையுள்ளவனாகயிருக்கிறேன். இந்த நிலைமையில் ஏதேனும் செய்யவேண்டியதாகப் போய்விட்டது; அதற்காக, ரஷியா அந்நியதேச மந்திரியின் "பெர்லின் விஜயம்" என்ற "ராஜதந்திர வேலை" சம்பவித்தது.

நீர் குமுழி, குமுழி.

நமக்கு மட்டும் கொஞ்சம் ஆச்சரியந்தான், ஏன் மாலடாவ்போக ஒத்துக் கொண்டார்? வரமுடியாதென்று மட்டும் அவர் சொல்லியிருந்தாரானால் ஹிட்லர் 'முகரை' உடைந்திருக்கும். இருந்தாலும் ஹிட்லரின் மகத்தான யோசனை என்ன வென்று யோசிப்போம். பின் வரும் வகையாகத்தான் அவர் யோசனை இருந் திருக்கவேணும் :—

(i) மூவர் உடன்படிக்கையில் ரஷியா சேரும்படி செய்து ஒரு ராஜ தந்திர லாபமடையலாம் என்றிருக்கலாம்.

(ii) அவரை தேவையான எண்ணெய் அனுப்பும்படி, மாலடாவ் தாவாங் கட்டையைப்பிடிக்க வேண்டியிருக்கலாம்.

(iii) ஒருவேளை தளவாட தொழிற்சாலைகள் பிரிடிஷ் விமானப்படைகளால் தகர்க்கப்பட்டு வருவதை உத்தேசித்து, தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க சில காபந்தான இடங்கள் வாடகைக்கு நியமித்துக்கொள்ள ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கலாம்.

(iv) பால்கன் நாடுகளில், அதிலும் முக்கியமாக பல்கேரியாவில், ஹிட்லர் செய்யும் சூழ்ச்சிகளைப்பற்றி ரஷியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளவேண்டியிருக்கலாம்.

இந்தக் கதையெல்லாம் கேட்க மாலடாவ் ஏன் போயிருக்கக்கூடுமென்று யோசித்துப்பார்ப்போம். ஜெர்மானியர் பல நாடுகளில் செய்யும் சூழ்ச்சிகளில் ரஷியருக்குக் கவனம் உண்டு. அது மட்டுமல்ல—ஜெர்மனி போர்புரிந்தவண்ண மாக இருப்பதில் ரஷியாவுக்கு வெகு அக்கறை.

ரகசியமும், உருமலும்.

போரில் முக்கியமான கட்சிக்காரர்களைக்காட்டிலும் ரஷியாவினுடைய அபிப்பிராயங்கள் புதிர் போட்டதுபோலிருக்கிறது. ஜெர்மனியும் பிரிடனும் போரில் வெற்றிபெற்று போரை சீக்கிரம் முடிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டிருக்க, ரஷியா மட்டும், தனக்கு முன்னே எக்காலத்திலுமில்லாதவிதமாக இப்போது ஐரோப்பாவில் தன்னிஷ்டம்போல் செய்ய சந்தர்ப்பம் கிட்டவேணுமென்ற எண்ணத்துடன், போரில் சம்பந்தப்பட்ட பேர்களெல்லாம் அலுத்துக்களைத்து நிர்ஜீவனுய்ப்போகும்வரை யுத்தத்தை நீட்டி வைப்பதில் ரொம்ப அக்கரை. ஆகையால், ரஷியாவானது வெளிப்படையாக ஒருகட்சியை ஆதரிக்க ஆரம்பித்தால், மற்றொரு கட்சி ஜயித்துவருகிற தென்பதற்கு அடையாளமென்று நாம் நம்பலாம். பிரிடிஷ் சிப்பாய்கள் சொல்லும் பாஷையில் ஒரு கண்ணடி அடிக்க மாலடாவ் அனுப்பப்பட்டார் என்று நாம் நினைப்பதில் பிசகில்லை. நமக்குத் தெரிந்தமட்டில் ஒரு கண்ணடி அடித்ததை விஞ மாலடாவ் வேறொன்றும் செய்யவில்லை.

• தான் எதிர்பாராத சில விஷயங்களையும் பார்த்திருப்பார். பிரிடனிலிருந்து 750 மைல் தூரத்திலுள்ள டான்ஜிக்கில் (Danzig) அந்த நகரம் பிரிடிஷ் விமானிகளால் த்வம்ஸம் பண்ணப்பட்ட சில நாழிகைகளுக்குள் ரிப்பன்டிராப்பை பேட்டி கண்டார். ஹிட்லருடன் அவர்பேசிக் கொண்டிருக்கும்போது, பெர்லின் உடைபட்டுக்கொண்டிருந்தது. மறுநாள் காலை போஜனம் நடக்கும்போது வந்த தகவலும் ருசிகரமானதல்ல. ஏன்? டாரன்டோவில் இதாலிய கப்பற்படைக்குக் கிடைத்த உதையைப்பற்றின சமாசாரம்.

இதாலிய கந்தரகோளம்.

மூன்று வாரங்களிற்கு முன் இதாலியரை கிரேக்கர் நொருக்கிவிடுவார்களென்று புலப்பட்டபின், யூகோ-ஸ்லாவியா வழியாகவோ, பல்கேரியாவின் ஸ்டரமா பள்ளத்தாக்கு வழியாகவோ ஹிட்லர் இதாலிக்கு உதவி அனுப்புவார் என்று எல்லோரும் நம்பினர்கள். மாலடாவ் பெர்லினுக்கு விஜயம் செய்தபின் ஜெர்மனி ஒருகாரியமும் செய்யவில்லையென்பது விசித்திரமாகத்தானிருக்கிறது.

சொல்ல முடியாத விஷயம்.

ஐரோப்பாவிலேயே ஆங்கிலேயர்கள்தான் பெருந்தன்மை வாய்ந்தவர்கள் என்று பழையநாள் ஆங்கிலேயரின் பிரத்தியேகமான எண்ணம் என்று குற்றங்கூறுவதுண்டு. தம்தேசமுண்டு, தாம் உண்டு என்றிருந்துகொண்டு கொஞ்சம் தலைகர்வமும் கொண்டிருந்தபோதிலும், அவர்கள் எண்ணம் அவ்வளவு பிசகானதா? ஐரோப்பிய பெரிய தேசத்தாரைக் கவனிக்கும்போது, அந்த எண்ணம் பிசகானதல்ல. ஓநாய்கள்மாதிரி கொள்ளைசெய்யும் ஜெர்மானியர் நரிகளைப்போல் திருட்டுத், தனமுள்ள இதாலியர்கள், வம்பு வியவகாரம் செய்யும் சக்தியற்ற ப்ரெஞ்சுக்காரர், சுவற்றுப்பூனைகளான ரஷியர், வாய்வைத்துப்பேச லாயக்கில்லாத

ருமேனிய பழிவாங்கிகள், இவர்களுடன் ஒத்துப்பார்த்தால் தெரியும் புகா ரெஸ்டில் (Bucharest) நடந்த கொடுங்கொலையைப் பற்றிக்கேட்டுப் பொருக்க முடியாமல் ஒரு போர்ச்சுகல் பாதிரி சொன்னாராம், "நாம் கிறிஸ்துவர் என்ற காரணத்தாலும், நாமெல்லோருமே மனிதவர்க்கத்தவரானபடியாலும், இந்த அக்கிரமம் கூடாதென்கிறேன்'.

ஜெர்மானிய அரசியல் பள்ளிக்கூடங்களில் என்ன அருமையான பாடங்கள் சொல்லித்தருகிறார்கள்!

கிரீஸே, வந்தனம்.

ஆகாய முழுவதும் இப்படி மூட்டம் போட்டிருக்கும் சமயம் கிரேக்கரின் தீரம் சூரிய கிரணம் போல் பிரகாசிக்கிறது. புராதன உலகத்திற்கு பல வகையிலும் நன்மை செய்த இந்த ஜாதியார் எதிர்கால உலகத்திற்கும் நன்மை புரியக்கூடும். ஆனால் எவ்வளவு சேதம், எவ்வளவு கஷ்டம்! குளிர்காலத்தில் கிரேக்கர்கள் நிலையைப்பற்றி நினைத்துப்பாருங்கள்; நேசதேசத்தாரின் செல்வ நிலையால் அவரவர்கள் தேசங்களுக்குச்செய்துகொண்ட ஏற்பாடுகளன்னியில், இதாலியர் ஒருவழியாய் அமுக்கப்படும்வரை அவர்கள் இறைக்கும் குண்டுகளால் இரவும் பகலும்பாதிக்கப்பட்டுக் கஷ்டப்படவேண்டும். அந்த அழகிய நாட்டின் துயரமடைந்த ஜனங்களுக்கு பணம் காசு கொடுத்து நம் தேசத்தார் உதவி புரிவதைப்பற்றி மதராஸ் மெயில் பேபரில் பார்க்கமனதிற்கு ரொம்ப சந்தோஷமாகவிருக்கிறது.

இச்சமஸ்தானத்தில் யாரேனும் இங்ஙனம் பணசகாயம் செய்யத் தயாராக விருந்தால், அவர்கள் தொகைகளை இந்த யுத்த அறிக்கை நிலயத்தின் காரியதரிசிக்கு அனுப்பினால், அவைகளை அவர் சந்தோஷத்துடன் மதராஸிலுள்ள கிரேக்க ஸ்தானிகருக்கு அனுப்புவார். ஸ்தானிகரும் அவர் தேசத்தாரும் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

யுத்தநிதி கொண்டாட்டம்.

யுத்த நிதிக்காக இச்சமஸ்தான ஜனங்கள் வெகு நன்றாக நடந்துகொண்டிருக்கிறார்கள். யுத்தநிதி கொண்டாட்ட கமிட்டியாரின் தீவிர முயற்சியின் பயனாக மேற்கொண்டும் ஒரு நல்ல தொகை அனுப்பப்பட்டதாக இன்னும் ஒரு வாரத்தில் பிரசுரப்படுத்தலாமென்று எதிர்பார்க்கிறோம். மூன்று நாள் வரை அழகிய கொண்டாட்டங்கள் காலேஜில் நடைபெறும். குறைச்சலான அளவிற்குச் செய்யப்படும் செலவுபோக மீதப்படும் தொகை யுத்த நிதிக்கு அனுப்பப்படும். காலேஜைச்சுற்றி வகைவகையான அமைப்புகள் கிளம்புகின்றன; இந்தப் பதிப்பைப் பார்க்குமுன்னமேயே இதைப்படிப்போர் அனைவரும் மேற்படி கமிட்டியார் செய்யும் வேலைகளை நேராடி பார்த்து ஆனந்தமடைந்திருப்பார்களென்று எதிர்பார்க்கிறேன்.

இந்திய முட்டுக்கட்டையைப்பற்றி லார்டு ஸாமுவேல்.

தனித்துநில்லாமல் பரஸ்பர பற்றுதல்தான் பிரிடிஷ் கூட்டுறவு நாடுகளின் லக்ஷியம்.

கக்ஷி வித்யாசங்களை எப்பொழுது பாராட்டக்கூடாது.

சர்வாதிகாரிகளைப் பலப்படுத்தாமல் இருக்கவேண்டியதின் அவச்யம்.

லார்டு ஸாமுவேல் 'இந்திய முட்டுக்கட்டை' என்ற தலைப்புடன் 'கண்டெம்பரரி ரிவியூ' வில் எழுதுகிறார்:—

"இந்திய ஜாதீய இயக்கத்தில் எனக்கு எப்பொழுதும் அனுதாபம் உண்டு. அதனை ஆண்டுவரும் ஆங்கிலேய அன்னிய அரசாட்சியிலிருந்து அதை விடுவித்து, உலகிலுள்ள மற்ற தேசங்களுக்குச் சமமாக இந்தியாவை கௌரவம் வாய்ந்த சுயாட்சிபுரியும் நாடாக நிலைநிறுத்துவதும் எனக்கு என்றும் நியாயமான உயர்ந்தகொள்கை என்று தோன்றியிருக்கிறது.

"ஆயினும் சுயேச்சைக்கொள்கையில் எனக்கு நம்பிக்கையில்லை—அது இந்திய சுயேச்சைக்கு மட்டிலல்ல—இங்கிலாந்து, டொமினியன்கள் விஷயத்திலும்கூட. இங்கிலாந்து தீவிலிருப்பவர்கள் சாம்ராஜ்யத்திலுள்ள மற்ற கூட்டுறவு நாடுகளிலிருந்து 'சுயேச்சையாக' இருக்கவும், மற்றவர்களின் விருப்பங்கள் எப்படிக்கிருப்பினும் தான்தோணியாக நாம் நமது வழியில் செல்வதையும், பிறர் ஆபத்திலிருக்கும் பொழுது அவர்களுதவிக்குச் சென்றால் நமக்கு கஷ்டங்கள் நேரிடுமென்று நாம் பின்வாங்குவதையும், நான் ஒருநாளும் விரும்பேன். அது உலக க்ஷேமத்திற்கு உகந்ததன்று, நமது க்ஷேமத்திற்கும் அன்று. உலகில் ஏற்கனவே 'சுயேச்சை' நாடுகள் இருப்பது ஜாஸ்தி—60-க்குமேல். குறைந்திருந்தால் இப் பூமியில் ஒழுங்கு நிலவும், அதிகரித்தால் ஒழுங்கீனம்தான் அதிகரிக்கும்."

இந்திய கவர்ன்மெண்டுக்கும் காங்கிரஸுக்கும் சமீபத்தில் நடந்த பேரங்களைக் கூறிவிட்டு தற்பொழுதிருக்கும் நிலைமையைப்பற்றி முடிவுரையாக லார்டு ஸாமுவேல் கூறுகிறார் :—" நிலைமையை மறுபடியும் காங்கிரஸ் புனராலோசனை செய்யவேண்டாமா? அவ்வாறு ஆலோசிப்பதும் இந்தியத் தற்காப்புக் கோணத்திலிருந்து இருக்கவேண்டாமா? நாகரீக உலகம் பாதியில் இன்று நடுநாயகமாக விளங்குவது யுத்தம்தான் என்ற கொரேமான தத்வமும் மறக்க முடிந்த விஷயமோ? தற்காப்பில்லாத ஒரு இந்தியா தாக்கப்படாமல் நிற்கும் என்று எதிர்பார்ப்பது மிகை. சுயேச்சை எனில் பிரிந்துநிற்பது, பிரிவு எனில் ஆங்கில தரைப்படை, கப்பற்படை இவைகளின் காபந்திலிருந்து விலகுவது என்றால், ஓரே ஒரு கேள்விதான் மிஞ்சும்—புதிதாகப்படை எடுப்பவர்கள் மூன்று திக்குகளில்—கிழக்கு, மேற்கு, வடக்கு—இவற்றுள் எந்த திக்கிலிருந்து இறங்கப் போகிறான்?

"இதை காங்கிரஸ் தலைவர்களும் உணருகிறார்கள்தான்; சுயேச்சை என்பதால் அவர்கள் வாஸ்தவத்தில் பிரிந்துநிற்க உத்தேசிக்கவில்லை; தேசகௌரவத்தை உத்தேசித்து அந்த பாத்தியம் அதற்கு எப்பொழுதும் இருக்கவேண்டும் என்று காங்கிரஸ் விரும்புகிறது; நடப்பில் அந்த பாத்தியதையை அனுஷ்டானத்துக்கு கொண்டுவர விரும்பவில்லை;-இப்படிக்கெல்லாம் என்றால், இவ்வளவு குழப்பங்களை கிண்டுவானேன், இவ்வளவு தாழ்வு எதற்கு? அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர பிரியும் பாத்தியம் கோரப்படவில்லை, அது இருக்கிறது என்ற வெறும் பாத்தியஸ்தாபனைக்காகமட்டில் என்றால், மகமதியர்களை இதனால் விரோதிப்பானேன், அரசர்கள் விரோதத்தை சம்பாதிப்பானேன், பிரிடிஷ் சாம்ராஜ்யம் தகர்வதால் உலகிற்கே ஏற்படக்கூடிய தீங்குகளை பரீட்சை பார்ப்பானேன்? இத்தருவாயில், தீராத ஒரு வியவகாரத்தை கிளப்பி, ஆக்கிரமிக்கும் சர்வாதிகாரிகளின் கையை ஓங்கச்செய்வானேன்? எதைச்சொன்னால் என்ன, அவர்களை வெல்லுவது உலகெங்கும் ஜனநாயகத்தின் வெற்றி அல்லவா?

"அனுஷ்டானத்தில் சுயஆட்சி ஒரு கஷ்டமான வேலை. அதை ஆதரிப்பவர்களுக்குச் சமீபத்தில் பல தோல்விகள் ஏற்பட்டிருக்கிறது. அவைகளும் அவர்களுடைய பிழையாலேயே. தக்க சமயங்களில் ஏற்படும் வாதங்கள் நல்லவை. அரசியல் வாதிகள் வரையறைந்தகொள்கைகளை ஆதரிக்கவேண்டும், அவைகளை விடாப்பிடியாகப் போற்றவேண்டும், தாராளமாக வெளியிடவேண்டும், விட்டுக்கொடுக்காமல் அவைகளுக்காகச் சண்டை போடவேண்டும். ஆனால் பொது ஆபத்து ஒன்று வரில் இவைகளைக் கட்டிவைக்க வேண்டும்; தேசஒத்துமை அப்பொழுது எல்லாவற்றிலும் மேல். அநேக நாள் சிரமப்பட்டு நாம் இதை இங்கிலாந்தில் பயின்றோம். அதனால் இங்கு ஜனநாயகம் தழைத்து ஓங்குகிறது. இதன் ரகசியம் எங்களுக்கு நன்றாகத்தெரியும். தேசத்தின் தலையில் ஆபத்து நிற்கும்பொழுது அதை விலக்க எல்லா கட்சிகளும் ஒன்று சேர்வார்கள். இதை நாங்கள் செய்யாமலிருந்தால், மற்ற தேசங்களைப் போல் எங்கள் தேசத்தின் சுதந்திரமும் அழிந்திருக்கும்.

"இந்தியாவில் காங்கிரஸ் தலைவர்கள் 20-வருஷங்களாக ஓயாமல் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இவ்வளவு பெரும் தியாகங்கள் செய்வதும் பெருங்கஷ்டங்களை அனுபவிப்பதும் இந்த நியாயமான சுதந்திரக்கொள்கைக்காகத்தான். ஆயினும் அவர்களுக்கு புலன்படாதது ஒன்றுதான்—இவ்விதக் கடமை ஒன்று உண்டு, தருணமும் இது என்பது. இயக்கத்தின் வேகம் அவர்களை அடித்துச் செல்லுகிறது. ஆயினும் முட்டுக்கட்டை போடும் பிரச்னைகள் தீர்க்கமுடியாதன அல்ல. தீர்க்க மனமிருந்தால் வழியுண்டு. உலகின் நெருக்கடி அதை வாய்விட்டுக் கூவுகிறது."

இங்கிலாந்தைப் படையெடுப்பது நடக்காத காரியம்.

ஹிட்லருக்கு நெபோலியன் செய்யும் உபதேசம்.

நெபோலியன் வெற்றியடைந்து வந்த காலத்தில் இங்கிலாந்தைப் படையெடுப்பதாகப் பலதடவை பயமுறுத்தினான். ஆனால் ஆரம்பத்தில் இதை உண்மையென்று ஒருவரும் நினைக்கவில்லை. 1803-ல் ஏமியன்ஸில் உடன்படிக்கை செய்த பிறகு நெபோலியன் பிரிடனுக்கு எதிர்க்கரையில் சைன்யங்களைத் திரட்டினான்.

படையெடுப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தன் மேற்பார்வையிலேயே முடித்துக்கொண்டு தானே தலைமை வகித்து இங்கிலாந்தை எதிர்க்கத் தயாராயிருந்தான். புலாயனில் முகாம் செய்தான். பாரிஸிலிருந்து மேற்கே செல்லும் ரஸ்தாக்களில் கை மரங்களை நட்டு, இதுவே இங்கிலாந்துக்குப் போகும் பாதையென்று குறிப்பிட்டான்.

நெபோலியன் பிரசாரத்தில் ஸமர்த்தன். இம்மாதிரியெல்லாம் பிரசாரம் செய்து பிரிடிஷ்காரர்களை பயமுறுத்தி, அவர்கள் மனதைத் தளர்த்திவிடலாமென்று பார்த்தான்.

பிரெஞ்சுக்காரர்கள் மனதைக் கலக்க, இங்கிலாந்தைப் படையெடுத்தால், கண்டபடி கொள்ளையடிக்கலாமென்றும், அழகிய ஆங்கிலப் பெண்களை இஷ்டப்படி கவரலாமென்றும் பிரஸ்தாபித்தான்.

ஆபத்து வந்துவிட்டதென்று பயந்து ஜனங்களை ஒன்றுசேர்க்க, பிரிடனிலும் பிரசாரங்கள் செய்யப்பட்டன. ஆறு மாதத்திற்குள்ளாக 300,000-பேர்கள் தானாகவே முன் வந்து சண்டைசெய்ய பழக்கப்பட்டார்கள்.

இது இப்படியிருக்க, கடலில் பிரிடிஷ் ஆதிபத்தியம் நிலைத்தது. சானல் கடலானது பிரிடன் கைவசமாயிற்று. பிரிடிஷ் கப்பல்கள் பிரெஞ்சுக் கரைகளையும், நகரங்களையும், கப்பல்களையும் தகர்த்தன. அநேக வெற்றிகளைப்பெற்றன. முடிவில் ட்ரபால்கார் சண்டையில் நெல்ஸன் பிரெஞ்சுக் கடற்படையை அடியோடு அழித்துவிட்டார்.

இதிலிருந்து இங்கிலாந்தைப் படையெடுக்கும் பேச்சு நின்றுவிட்டது. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் ஆஸ்டர்லிட்ஸ் போன்ற வெற்றிகளை நெபோலியன் அடைந்து வந்தான். ஆனால் அவனைச்சுற்றி, கடல் முற்றுகை போடப்பட்டுவிட்டது. முடிவில் அவன் தோல்வியுமடைந்தான்.

1803-ல் ஷெரிடன் சொல்லியது.

நெபோலியன் பிரிடனைப்பிடிக்கப் பயமுறுத்தியபோது ஆர்-பி-ஷெரிடன் கீழ்கண்ட வார்த்தைகளைப் பிரசுரித்தார் :—

அதிகாரத்துக்கும், கொள்ளைக்கும் ராஜ்யத்துக்கும் ஆசைப்பட்டு, வெறி பிடித்து நம்முடைய எதிரிகள் யுத்தத்துக்கு வந்திருக்கிறார்கள். நாமோ தாய் நாட்டுக்காகவும், மதத்துக்காகவும், நம் குடும்பங்களை ரக்ஷிக்கவும் யுத்தத்திலிறங்கி யிருக்கிறோம். எதிரிகளுடைய தலைவனோ கொள்ளையடித்து, அகப்பட்டதைக் கைப்பற்றும் நோக்கமுடையவன்: இவனுக்குப் பயந்து, இவனை வெறுத்து இவனுடைய ஜனங்கள் இவனுக்குக் கீழ்ப்படிகிறார்கள். நமக்குத் தலைவர்கள், நமது அரசரும், கடவுளுமாவார்கள். நாம் நம் அரசரை விசுவாஸிக்கிறோம்; கடவுளைப் பூஜிக்கிறோம். நமக்கு ஞானத்தையும், ஸ்வதந்திரத்தையும் கொடுத்து, தேசத்தை முன்னேற்ற நம்மை நிர்ப்பயமாய்ச் செய்ய எதிரிகள் பிரயத்தனப் படுவதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் ரக்ஷிப்பது ஆட்டுக்குட்டியைக் கழுகு ரக்ஷித்தது போலாகும்: அதாவது கொன்று, தின்றுவிடுவதுதான். ஆகையால் இவர்களுக்கு நாம் கொடுக்கும் பதிலிதுவே :—

எங்கள் அரசர் எங்களுக்கு மனமுவந்தவர். எங்கள் சட்டங்கள் எங்கள் பெரியோர்கள் தேடிவைத்திருக்கும் ஆஸ்தி. எங்கள் மதம் ஸர்வஜன நட்பையும், அந்தியத்தில், பரமானந்தத்தையும் கொடுக்கும்.

யுத்தத்தின் முடிவைப்பற்றி பால்கன் நாடுகளின் அபிப்பிராயங்கள்.

உத்தியோகஸ்தர்களுடன் சம்பாஷித்ததில் வெளிப்பட்டவை.

அனுபவம் வாய்ந்த போர்வீரர்களின் அபிப்பிராயங்கள்.

"டெயிலி டெலிகிராப்பு" க்கு ஆதென்ஸ் நகரில் நிருபராயிருப்பவர் அனுப்பியிருக்கும் செய்திகள்."

சென்ற ஆறு வாரங்களில் பால்கன் நாட்டு தலைநகர் ஒவ்வொன்றையும் சுற்றிப்பார்த்து விட்டேன். தென் கிழக்கு ஐரோப்பா முழுமையும் நிச்சயமாக வெகு ஸ்வாரஸ்யமாக இருக்கும் ஒரு விஷயத்தை நான் அறிந்தேன். அதாவது பால்கன் நாட்டு மனப்பான்மை.

முடிவாக நாஸி பலம் ஒழிய இரண்டு மூன்று வருஷங்களாயினும், ஹிட்லரின் வீழ்ச்சி ஏற்கனவே நிச்சயமாகிவிட்டதென்று தென் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள வெகு நுட்பமான புத்திமான்களில் பெரும்பாலார் நினைக்கிறார்கள் என்று கண்டேன்.

இதாலியைப்பற்றியோ, யோக்கியதாம்சமுள்ள எவரும் இன்னும் ஒரு வருஷம் பூரா எதிர்ப்பைத் தாங்க முடியுமென்று நினைப்பதைக் காணவில்லை.

ஹங்கேரி, யுகோஸ்லாவியா, பல்கேரியா, ருமேனியா முதலிய தேசங்களின் அரசியல் நிலையும் செல்வ நிர்வாக நிலையும் ஜெர்மனியின் ஆதீனத்திலிருப்பதற்கு நேர்முகமாய் விரோதமான அம்மனோ நிலையைக் கவனிக்குங்கால் ஆச்சர்யமாக இருக்கிறது.

அவர்களைக் காட்டிலும் நாஸி அதிகாரத்துடனும் நாஸி உபாயங்களுடனும் சம்பந்தமுள்ளவர்கள் யாவருமில்லை. பிரிடனும், குடியரசுகளும் யுத்தத்தில் வெற்றியடையப் போகிறார்கள் என்று இந்தத் தேசங்களில், பெரும்பாலார் போர் வீரர்களிலும், போர் வீரர்களல்லாதவர்களிலும் பெரிய மனிதர்கள் ஆழ்ந்த அசையாத எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

நான்கு பால்கன் தலைநகர்களிலும் நான் செய்த விஸ்தாரமான ஸம்பாஷணைகளில், யாதொரு பொறுப்பு வாய்ந்த ஸர்க்கார் அதிகாரியாவது, ராஜீயத்தானாவது நாஸிப்படை வெற்றிபெறும் என்ற நம்பிக்கையை வெளியிடவில்லை.

ஆனால் இந்த அபிப்பிராயத்தை பெரிதுபடுத்தக்கூடாது. ஏனெனில் சில மந்திரிகள் ஹங்கேரியிலுள்ள நாஸி நண்பர்களாயினும் சரி, ருமேனியாவிலுள்ள அயரக்ஷகர்களாயினும் (Iron guards) ஸரி, வேறு விதமாக நினைக்கிறார்கள். ஆனால் நான் எத்தனையோ உத்தியோகஸ்தர்களைச் சந்தித்த போதிலும், ஜெர்மனி நிச்சயமாக வெற்றி பெறும் என்று நினைக்கும் ஒருவரைக்கூட நான் காணவில்லை.

ஆனால் காலக்கிரமத்தில் நாஸி ஜெர்மனியையும் இதாலியையும் பிரிடன் தோற்கடித்து விடுமென்று அதிகார வர்க்கத்தினரும், உத்தியோகப்பற்றற்றவரும் தானாக, ஸகஜமாக, சாதாரணமாகச் சொன்னதை கவனிக்க் வெகு விசித்திரமாக இருக்கிறது.

பால்கன் நாட்டு பாமர ஜனங்கள் இவ்வாறு திரும்பத் திரும்பச் சொல்வதை கவனிக்க தங்கள் மனோபீஷ்டத்தை ஒட்டிய யோசனையோவென்று தோன்றும் நெடுங்காலம் அரசியலிலும், ராணுவத்திலும் அனுபவம் வாய்ந்தவர்கள் அவ்வாறு யோசனை செய்கிறார்கள் என்றால், சென்ற ஜூன் மாதம் முதல் அவைகள நாளடைவில் தேர்ந்த நடப்பு விரசுகள் என்று கொள்ளலாம்.

வெகு உயரிய திறனுடன் பிரிடிஷ்கரார் ஸெப்டம்பர் மாதத்தோடு வெகு பெரிதும் கடினமுமான சோதனையை அடைந்தார்கள். பிரிடிஷ் பொறுமையையும், வெற்றியில் மன உறுதியையும்பற்றி பால்கன்காரருக்கு இருந்த சந்தேகமும் லண்டன் பேரில் விழுந்த வெடிகளோடு அழிந்துவிட்டன. காரியத்தில் இறங்கினால் கடைசிவரை பார்ப்போம் என்ற பிரிடிஷ் சக்தியானது புடாபெஸ்ட், பெல்கிரேட், ஸோபியா, புகாரெஸ்டு, இஸ்டான்புல், ஆதன்ஸ் என்ற நகர்களில் மனதை உறுதி செய்திருக்கிறது.

ருமேனியாவைச் சேர்ந்த டிரான்ஸில்வேனியாவை ஹங்கேரியத் துருப்புகள் வியாபித்துக்கொண்ட காலத்தில் ஒரு ருமேனிய தளகர்த்தர் சொன்ன வார்த்தைகள் என் ஞாபகத்தில் இருக்கிறது. அதாவது "பிரிடன் ஜெர்மனியை தோற்கடிக்கும். இது ஸஹஜம். இதைப்பற்றி கேள்வியே இல்லை" என்றார். இந்த அபிப்பிராயம் பால்கன் ராணுவ மனிதர்களுக்குள் நன்றாகப் பரவியிருக்கிறது. அது ராணுவ பண்டிதர்களின் தீர்ப்பை நிதர்சிக்கிறது.

இதாலி கிரீஸை படையெடுக்கப் பிரயத்தனப்படுமுன் இந்த அபிப்பிராயம் இருந்தது. ஆனால் முஸோலினியின் வெகு நஷ்டமுள்ள பெருத்த தவறுக்குப் பின் அது பலப்பட்டது.

பால்கன் தேசத்துக்கு ராஜ்யபார நிபுணர் ஸர்வ தேசிய கீர்த்தியுள்ளவர் சொன்னார்: "பிரிடிஷ் தீர்மானமும், அமெரிக்க தொழிற்சாலை சரக்குகளும் சேர்ந்து ஜெர்மனியை கட்டாயம் ஜெயிக்கும். ஏனெனில் ஜெர்மனியின் ஆயுதத் திரட்டும், ஆகாரச் சேகரமும் ஏற்கனவே நெருக்கடியில் இருக்கிறது." என்று.

பீரங்கிகளோடு பாராவிருத்தல்.

விமான எதிர்ப்புப் பீரங்கி நிலயத்தின் வேலை.

சத்துரு விமானங்களை எதிர்க்கும் வழி.

நுட்ப யந்திரங்களும் அதன் கையாட்களும்.

ஸ்ரீ டி. ஏ. ராமன் என்பவர் எழுதுகிறார்.

(“ஹிந்துஸ்தான் டைம்ஸ்” பத்திரிகையின் லண்டன் நிருபர், தற்பொழுது யுத்தநிலையை நோக்கும் நிருபராகவிருக்கிறார்.)

ஏதோ ஒரு தனிமையான குடியிருப்பு போல் தோன்றின பிரதேசத்தில் இரவு சமீபத்து மூடிக்கொண்டு இருந்தது. சர்வசாந்தமான காக்ஷி. குடிசைகள்; கூடாரங்களின் வரிசை; புகை போக்கிகள் வழியாகப் புகை; தென்பட்ட ஒரு போர் வீரனும் ஒரு வேலிக் காலில் சாய்ந்துகொண்டு சில சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். முட்டைகோஸ் திடல்கள் சுற்றுமிருந்தன.

மேகமடர்ந்த ஆகாயத்தின்குறுக்கே கருத்த புஜங்களை நீட்டிக்கொண்டிருந்த பீரங்கிகள் எனக்குக் கொஞ்சம் தென்பட்டன.

ஒரு சாதாரணப் போர்வீரன் என் பிரவேசச்சீட்டைச் சோதித்துவிட்டு, அக்குடிசைகளுக்கு மத்தியிலுள்ள பாதை வழியாக என்னைக்கூட்டிச் சென்றான். ஒவ்வொரு குடிசைக்கும் ஒருவாரான தோட்டம் இருந்தது.

ஏதோ பரிஹாரம் சொல்லிக் கொள்ளுவதுபோல் அந்தப் போர் வீரன், “ஐயா, இன்னும் நன்றாகயிருக்கும்; இப்பொழுது இங்கு தோட்டம் சாகுபடி காலமில்லை” என்று சொன்னான்.

“இன்னும் வெகு முக்கியமான வேலை கையிலிருக்கிறது” என்றேன்.

“ஆம், நாங்கள் ஏதோ கொஞ்சம் நன்மை செய்துகொண்டிருக்கிறோம்.”

தாழ்ந்த சிமிண்டுச் சுவர்களால் சூழப்பட்ட ஒரு வளைவை அடைந்தோம். ஒரு பெரிய சினிமா காமிரா போன்ற ஒரு கருவியைச் சுற்றிக்கூடி கொண்டிருந்தார்கள். மற்றொருவன் ஒரு பூதாகரமான தூரதிருஷ்டிக் கருவி போன்றதை வைத்துக்கொண்டு வேலை செய்துகொண்டிருந்தான். மத்தியில் பேசுங் கருவி வைத்துக்கொண்டு தலைவர் நின்றார். பீரங்கி ஸ்தானங்களுக்கு கேள்விகளும், ஆக்ஞைகளும் கூவிக்கொண்டிருந்தார். அவருடைய வார்த்தைகள் எனக்குப் புரியவில்லை. ஆயினும், அவை பீரங்கிகளின் முடிவான சோதனையைப்பற்றியது என்று ஊகித்துக்கொண்டேன்.

மெழுகு சீலையால் மூடப்பட்ட மாடிப்படியும் அதன் வழியாகச் செல்லும் ஒரு அறையும் இருந்தன. அது ஒரு விசையறை என்று நினைத்தேன். அவ்வறையிலிருந்து சிரிப்புச் சத்தங்கள் வந்துகொண்டிருந்தன.

மற்றொரு பக்கத்தில் மற்றொரு படி வழியாக தலைவர் என்னை ஒரு கப்பலறை போன்ற சிமிண்டு அறைக்குள் கூட்டிப் போனார். அவ்வறையில் இரண்டு

பெட்டியறைகளும் ஒரு ஜாதிக்காய்ப் பெட்டி மேஜையுமிருந்தன.

அவர் எனக்குப்பின் கதவை வெகு ஜாக்கிரதையாகச் சாத்தினுர். விளக்கை போட்டார். என் பிரவேசச்சீட்டை உற்றுக் கவனித்தார். என்னைக் கை குலுக்கினுர், "எல்லாம் சரியாகவிருக்கிறது. இப்பொழுது எங்கிருந்து ஆரம்பிப்போம். பீரங்கிகளைப் பார்ப்போமா" என்ருர்.

வேலை செய்தல்.

அச்சமயம் ஒரு கிச்சென்ற மணிச் சத்தம் கேட்டது.

"வழக்கத்தைக் காட்டிலும் முன்னரே" என்று சொல்லி தன் கடிகாரத்தைப் பார்த்தார். "மேலே போவோம்" என்ருர்.

வேலை செய்வதற்குத் தடபுடலாகப் பரபரப்பு இருக்குமென்று எதிர்பார்த்தேன். அப்படி ஒன்றுமில்லை. ஆட்கள் அவரவர் இடங்களுக்கு அமைதியாகச் சென்ருர்கள். அப் பெரிய காமிராவைச் சுற்றியிருந்தவர்கள்—உண்மையில் அது வெகு நேர்த்தியாக அறிவிக்கும் கருவி—கொஞ்சம் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். பீரங்கிக்காரர்கள், தங்கள் இடத்திற்கு ஏறிச் செல்கிருர்கள்.

கொஞ்சதூரத்திற்கப்பால் மூன்று ஆட்கள் ஒரு "சப்தநிதானி"யை ஏற்றுகிருர்கள். அக்கருவியுடைய பெரிய எக்காளங்கள்போன்ற அவயவங்களைப் பார்த்தால் விசித்திரமாகவிருக்கிறது.

சற்று நிச்சப்தம். பிறகு, விசையறையிலிருந்து "தென் மேற்கில் இருந்து குறிவஸ்து" என்று சப்தம் வருகிறது. சப்தநிதானிகளிலிருந்து வேறு சில தூதுகள் வருகின்றன. "உயரம் 20,000 அடி" என்று யாரோ தூது அனுப்புகிருர்கள். "20,000 வைத்தாகிவிட்டது" என்று அறிவிக்கும் கருவினருகேயுள்ள ஆள் பதிலளித்தான்.

சில க்ஷணகாலம் யந்திரத்தைச்சுற்றி நெருக்கமான கூட்டம். உயரம், வேகம் முதலிய விஷயங்கள் அதற்கு ஊட்டப்படுகிறது. அறிவிக்கும் கருவியருகேயுள்ள ஆள் "சுடு" என்கிருன். ஒரு ஸார்ஜண்டு "சுடு" என்று அலறுகிருன். ஒரு பயங்கரமான மின்னல் மைதானத்தைப் பிரகாசப்படுத்துகிறது. தூரத்திலுள்ள வீடுகள் ஒளியில் சிவந்துநிற்கின்றன. என்னை எங்கேயோ தூக்கிக்கொண்டு போகிறது போல் தோன்றுகிறது. சுவற்றைப் பிடித்துக்கொள்ளுகிறேன். காதில் பஞ்சடைத்துக்கொண்டிருந்தாலும் குண்டுகள் ஆகாயத்தில் போகும்போது வெடிகுண்டுகள் இறங்கிவரும் சப்தம்போல் சப்தம் செய்துகொண்டு போவது என் காதில் விழுகிறது.

தக்ஷணமே, "சுடு" என்ற ஆக்ஞை கிளம்புகிறது.

இச்சமயம் ஒரு மின்னொளியை நேரில் பார்க்கிறேன். இரண்டு ஜ்வாலைப்பந்துகள் என்கண்முன் தெரிகின்றன. பிறகு சில க்ஷணங்கள் ஒரு கும்பிருட்டாக விழுக்கிறது.

நிமிஷத்துக்கு நிமிஷம் "வடக்கில் இருந்து குறிவஸ்து"வென்றும், "தெற்கிலிருந்து" என்றும், "தலைக்குமேல்" என்றும் தூதுகள் வந்துகொண்டிருக்கின்றன. முன்சொன்ன ஏற்பாட்டுப்படி வேலை நடந்துகொண்டிருக்கிறது—புலன்களை ரகஸ்யமாகச் சொல்லுதல், அறிவிக்கும் கருவியை வைத்தல், திரியின் எண்ணிக்கைகளைக் கூவுதல், பிறகு சுட்டுக்கொண்டேயிருத்தல்.

நடுவில் கொஞ்சம் நிறுத்தி, எத்தனை தயா சுடப்பட்டதென்று கூவுகிறார்கள். பீரங்கிகள் மறுபடி சுடுகின்றன. சுடு முறைகளுக்கு நடுவே சம்பாஷணை நடக்கிறது.

"ஒரு சிகரெட் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டு அந்த ஏற்பாடு முழுமையையும் உபதலைவர் எனக்கு விவரிக்கிறார்.

கண்களும் காதுகளும்.

மர்மக்கருவி அறிவிக்கும் கருவிதான் என்று தெரிகிறது. அது வெகு அற்புதமான நுட்பம் பொருந்திய கருவி. வெகு சமத்தர்களால் வேலை செய்யப் படுகிறது. அது "ஸாஸேஜ்" என்ற ஒரு ஆங்கில ஆகாரப்பண்டம்போல சுருண்டு நீளமாக விருப்பதால், அதை "ஸாஸேஜ் கருவி" என்று சொல்லுகிறார்கள். கொடுக்கப்பட்ட புலன்களை அக்கருவி ஏற்றுக்கொண்டு ஒருநொடிப் பொழுதில் வெகுகணக்காக, என்ன வேகத்தில், எந்தத்திக்கிலிருந்து என்ன உயரத்தில் என்று எடுத்துக்கொண்டு காற்றுக்கும், குண்டுகளின் கனத்துக்கும் இடம் கொடுத்து கமனகணித விசேஷங்களுக்கும் இடம் கொடுத்து விமான நிலயங்களைப்பற்றிய விவரங்களைக் கொடுக்கிறது.

எத்தனை விநாடிகளில் ஒரு குண்டு லக்ஷியத்தினிடம் சேருமென்றும் கணக்கிடுகிறது. ஏனெனில் கனத்த விமான எதிர்ப்புக் குண்டுகள் தொட்டாலாவது அல்லது குறிக்கப்பட்ட காலத்திலாவது வெடிக்கும். பகலில் தன்னுடைய "கண்கள்" மூலமாயும் இரவில் "தேடு வெளிச்சங்கள்" மூலமாகவும் வேலைசெய்கிறது. இல்லாவிடில், அதற்குவேண்டிய புலன்களை சப்த நிதானிகள்மூலமாகப் பெறுகிறது.

சுடுமுறைகளுக்கு மத்தியில் மற்றொரு இடையில் சப்த உத்தியோகஸ்தர் தன்னுடைய யந்திரத்தண்டை என்னைக் கூட்டிப்போகிறார்.

முன், லாம்பத்து வழியில் பியானோ வேலைக்காரராகயிருந்த தாமஸ் என்பவன் ஒரு முக்கிய வேலைக்காரன். அந்த எக்காளங்களுக்கு மத்தியில் இன்னும் இரண்டுபேர்கள் சற்றுத் தாழ்ந்த படிகளில் அமர்ந்திருக்கிறார்கள். எல்லோரும் காதுக்கருவிகளை தரித்துக்கொண்டு, அவர்களுக்கு முன்னுள்ள கருவிக்குள் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் கிரணங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

மூன்று மனிதர்கள் ஒரு சுற்றுமேஜையை ஆக்ஞைப்படி சுற்றிக்கொண்டிருக்கிறார்கள், பேசுவதும் வெகு மெதுவாகவும், ஒவ்வொரு அசைவும் வெகு ரகஸ்யமாகவுமிருக்கின்றன. ஏனெனில் வெகு தூரத்திலுள்ள யந்திரங்களின் சப்தங்களுடன் இங்குள்ள சப்தங்களும் கலந்துவிடும்.

தாமஸும் அவனுடைய ஆட்களும் அக்கருவி மூலம் அந்தரிக்ஷப் பிரதேசங்களில் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது விமானங்களின் சப்தத்தைப் பிடித்தவுடன், அறிவிக்கும் கருவிக்குள் புலன்களை அறிவிக்கிறார்கள்.

முன்னால் போர்வீரர்கள் பூமியில் காதுகளை வைத்துத் தொலையில்வரும் ரதங்களைப்பற்றிச் சொல்லுவார்கள். ஆனால், இந்த சப்தநிதானிகளை அடக்கி வேலை செய்ய வெகு சாமர்த்தியம் தேவையாயிருக்கிறது.

லாம்பத்தைச் சேர்ந்த தாமஸும் அவனுடைய ஆட்களும் வெகு கவனத்துடன் பொறுக்கப்பட்டு பல மாதங்கள் பயிற்சிபெற்றவர்கள். இப்பிரத்தி

யேகப் பயிற்சிவேண்டிய வேலேக்கு எல்லாத்துறைகளிலிருந்தும் சமர்த்தர்கள் வருவது ஆச்சர்யகரமாயிருக்கிறது. தாமஸுடைய அடுத்தாள் ஒருவன் தையல்காரன், மற்ருெருவன் கசாயிக்காரனுகயிருந்தான்.

அநற்குமத்தியில்.

விசையறைக்கு மறுபடி ஊர்ந்துசெல்கிருேம். சுற்றுமிருக்கும் காக்ஷியைப் பார்க்கிறேன். எங்களுடைய பீரங்கிகளும், அருகிலும், தூரத்திலும் உள்ள இதர பீரங்கிகளும் இடி இடித்துக் கொண்டிருக்கின்றன. கோபங்கொண்ட பீகிங்கீஸ் என்ற கொச்சி நாயைப் போல ஒரு சற்று லேசான பீரங்கி குலேக்கிறது. தோன்றிமறையும் பல வர்ணங்கொண்ட நக்ஷத்திரங்கள்போல் வெடித்த குண்டுகள் ஆகாயத்தில் இழைந்துநிற்கின்றன. வடக்கே ஒரு பெரிய ஜ்வாலே தெரிகிறது. வெகு தூரத்தில் மற்ருெரு தீயின் ஒளி மேகங்களில் பிரதிபிம்பிக்கின்றது.

ஒரு மூலேயில் சில சுளுந்துவெடிகள் இறங்குகின்றன. பீரங்கிகளின் ஸங்கிதத்திற்குமத்தியில் வெடிக்கும் வெடிகுண்டுகள் தடார் என்று விழும் சப்தம் கேட்கிறது. பயங்கரமான ஜோதி கொண்ட அக்காக்ஷி ஒரு விசித்திரமான அழகுடன் சோபித்தது.

"ஒரு வெடிவிமானம் அகப்பட்டுக் கொண்டது" என்று படபடப்பில்லாது குசுகுசுவென்றி பேசிக்கொள்ளுகிருர்கள். எனக்கு ஒருவனுக்குத்தான் அச்செய்தி புளகாங்கிதத்தைக் கொடுத்தது. ஒருமைலுக்கப்பால் அவ்வெடி விமானம் விழுந்திருக்கிறது. எங்கள் பீரங்கி குறிவைத்து அரைநிமிஷத்திற்கெல்லாம் விழுந்திருக்கிறது. ஆனல், அதைப்பற்றிக் குதூகலிக்க நேரமில்லே.

"தென்மேற்கிலிருந்து குறிவஸ்து—உயரம் 20,000 அடி" என்று தூது வந்திருக்கிறது.

விசையறைக்குள் செல்லுகிருேம். அங்கு பள்ளிக்கூட அறையின் தோற்றமிருக்கிறது—அதாவது அங்கு பரிமாறுக்கொள்ளும் பள்ளிக்கூடத்துக்கு ஒவ்வாத விகடத்துணுக்குகளேயும், பக்கப் பேச்சுகளேயும் தள்ளினல். ஒரு மூலேயில் காதுக்கருவி தரித்துக் கொண்டு சுமுகமாக ஒருவர் வாயில் குழாயுடன் உட்கார்ந்திருக்கிருர்.

அவர் என்னே வரவேற்கிருர். நான் தலேமை உத்தியோகஸ்தருடன் பேசும் போது குறுக்கிட்டு, தான் பம்பாய்க்கு வந்திருப்பதாகச் சொல்லுகிருர்.

யுத்த படம்.

அச்சமயத்தில் எல்லாம் காகிதத் துண்டுகளில் சில புலன்களேக் குறித்து தமாஷான தன் நண்பரிடம் கொடுத்துக்கொண்டே யிருக்கிருர். அந்த நண்பன் தன்முன்னுல் லண்டன் நகரின் பெரிய படத்தை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு இளேஞன்.

அப்படத்துக்குமேல் ஒரு கண்ணுடிக் கடிதம். தனக்குக் கிடைக்கும் புலன்களே அக்கடிதத்தில் அம்புகளே வரைந்து குறிக்கிருன்.

வெவ்வேறு திக்குகளிலிருந்து நம்மை நோக்கும் அம்புகளேப் பார்க்கிருேம். அவைகள் அருகே நகர்ந்து கொண்டிருக்கின்றன. ஒன்று நம் பீரங்கி வீச்சுக்குள் வந்துவிட்டது. உடனே "குறிவஸ்து சமீபிக்கிறது" என்ற தூது செல்கிறது. சில விமானங்கள் வெகுசமீபம் வந்து கடைசி க்ஷணத்தில் அப்பால் போய்விடுகின்றன. வேறு சில திடீரென்று புறங்

காட்டி ஓடிவிடுகின்றன. உடனே படத்திலிருந்து அடிக்கப்படுகிறது.

தலைமை உத்யோகஸ்தரும் ஒரு சதுரங்கக் கடிதத்தில் வளைவுகளையும், சில எண்ணிக்கைகளையும், புத்தகங்களையும் வைத்துக்கொண்டு வேலையாகயிருக்கிறார். மற்றொரு புத்தகத்தில் சில எண்ணிக்கைகளை எழுதி, சீக்கிரமாகக் கணக்குப்போட்டுக்கொண்டிருக்கிறார். குண்டுத்தடையைக் கணக்கிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டே, அதை எவ்வாறு கணக்கிடுகிறதென்று எனக்கு விவரிக்க பிரயத்தனப்படுகிறார்.

நாளைப் பத்திரிகைகளில் "லண்டன் நகர் ஒரு குண்டுப்படலத்தைப் போட்டது" என்றும் "வெகு கோரமுள்ள பீரங்கித்தடையால் அணிகள் முறிக்கப்பட்டன" என்றும் தலையங்கங்கள் பிரசுரிக்கப்படும். அவை தைரியமான எளிதான சொற்கள்தான். எவ்வாறு பீரங்கிக்குள் குறிவைத்தனவென்றும், படைகள் எவ்வாறு முறியடிக்கப்பட்டன வென்றும் ஒருவாறு அச்சொற்கள் அறிவிக்கின்றன. ஆயினும் விமான எதிர்ப்புப் பிரயோகம் என்பது அந்தரிக்ஷத்தில் கண்டபடி சுடுவதல்ல. வெகு கணக்குப்படி குறிவைத்தாலும், அது வெகு தற்செயலான வேலை. ஆயினும் தவறு தலைக் குறைக்க எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு குறியும் சரியான கால நிர்ணயத்துடன் முன்னாலோசனையுடன், எவ்வளவோ கணிதவரிசைகளைச் சார்ந்திருக்கிறது. ஒவ்வொரு குண்டும் தன் குறியை அடையுமென்ற நிச்சயத்துடன் அனுப்பப்படுகிறது.

இந்த மேலான அடிப்படையான வேலையும், பரமநிச்சயத்தைக் கணக்கிட்டுக் குறி வைப்பதும்தான், "பிரிடிஷ் விமான எதிர்ப்புப் பிரயோகம் நம்பமுடியாதபடி அவ்வளவு தவறுமலிருக்கிறது" என்ற புகழை ஜெர்மானியரே பேசும்படி செய்திருக்கிறது.

கதம்பம்.

1. "கிரீஸுக்கும், இதாலிக்கும் தேசசரித்திரம் நீடித்தது: இவை புராதன தேசங்கள். ஆனால் இதுவரையில் கிரீஸுக்கு இவ்வளவு கீர்த்தி வந்ததுமில்லை; இதாலிக்கு இவ்வளவு அபகீர்த்தி வந்ததுமில்லை." (ஹாலிபாக்ஸ் பிரபு-லண்டன் நவம்பர் ௴ 21௳).

2. "லாபம் வரும்போது, வியாபாரத்தில் கூட்டாளிகளைச் சேர்ப்பதில்லை." (நியூயார்க்-வியாபாரி-நவம்பர் ௴ 23௳ சமீபத்தில் நடந்த அச்சுநாடுகளின் சூழ்ச்சியைப்பற்றி).

3. "ஆசியா நாடுகளில் ஜீவிய திட்டத்தையும், சௌகரியங்களையும் உயர்த்தப் பார்க்கிறேன். இதைச் செய்யாதவரையில் ஐரோப்பாவில் அமைதி ஏற்படாது." (மிஸ்டர் எர்னஸ்ட்-பெவின்-கார்டிப், நவம்பர் ௴ 24௳).

4. "ஜெர்மானியருக்குத் தாக்ஷண்யமே காட்டக்கூடாது. காட்டினால் நமக்குத்தான் ஆபத்து." (ஸர் ஆர்-வான்ஸிடார்ட்-லண்டன்-நவம்பர் ௴ 25௳).

5. "ஆயுதங்களைத் துரிதமாய் உற்பத்தி செய்தால் யுனைடட்-ஸ்டேட்ஸ் தொழிலாளிகள் படையெடுக்காமலே ஜெர்மானியரை வென்றுவிடலாம்." (ஸர் வால்டர்-ஸ்ட்ரைன்-நியூயார்க்- நவம்பர்மீ 25வ).

6. "ஒரே ஒரு யுத்தக் கப்பல்தான் இதாலிக்கு நஷ்டம். இதாலிய வீர மக்கள் உண்மைக்கு அஞ்சார்கள். உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புவார்கள்." (முஸோலினி-உண்மை கண்ணாடியில்).

7. "பிரிடனுக்கும் ஐரோப்பாவுக்கும் ஸ்வதந்திரமும், நாகரீகமும் வேண்டுமென்றால் தியாகம் செய்யத் தயாராயிருக்கவேண்டும்." (மிஸ்டர் ஸி. ஆர். அட்லி-லண்டன் நவம்பர்மீ 26வ).

8. "அந்தஸ்திலும், தானாக ஆரம்பித்துக் காரியங்களை நடத்துவதிலும் ஸாம்ராஜ்ய நாடுகள் இப்பொழுது சமத்துவத்தைப் பெற்றுக் கூட்டாளிகளாய் விட்டன." (மிஸ்டர் எல்.. எஸ். அமரி-லண்டன் டிஸம்பர்மீ 1வ).

9. "ராஜீய கக்ஷிகளுடைய தந்திரங்களின் முடிவாய் கலவரங்கள் இந்தியாவில் கிளப்பிவிடப்பட்டபோதிலும், பிரிடன் வாக்குக் கொடுத்திருக்கிறபடி, இதர சாம்ராஜ்ய நாடுகளுக்குச் சமமாக இந்தியாவும் பூராவாக உரிமைகளை அடைய, உறுதியாய் முன்னேறி வருகிறது." (மிஸ்டர் எல். எஸ். அமரி-லண்டன் டிஸம்பர்மீ 2வ).

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

ஜெர்மனியைச்சுற்றி பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையின் பலன்.

ஜெர்மனிக்கு ப்ரஸீல் (Brazil) தேசத்தோடு சமாதானகாலத்தில் வியாபாரமதிகமாயுண்டு. 1938-ல் 9,000,000 பவுன் பெறுமானமுள்ள சரக்குகள் ப்ரஸீலிடமிருந்து ஜெர்மனி வாங்கிற்று. இந்த வியாபாரமெல்லாம் வெகுவாய் பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையால் நின்றுவிட்டதாக நவம்பர் 21-ம் தேதி ஒலிபரப்பில் ஜெர்மனி ஒப்புக்கொள்ளுகிறது. இதனால் ப்ரஸீலுக்கேற்பட்டிருக்கும் பரிதாப நிலைமையை ஒரு ப்ரஸீல் பத்திரிகை விவரித்திருப்பதையும் ஜெர்மன் ஒலிபரப்பு பிரசுரித்திருக்கிறது. பத்திரிகை சொல்லுவதாவது :—

"எங்கள் தேசத்தில் இந்த வருஷம் ஆரஞ்சுப்பழம் சரியாய்க் காய்க்கவில்லை. விளைந்த சோளமெல்லாம் வாங்குவாரற்று அழுகிப்போகிறது. காப்பிக்கொட்டை வியாபாரம் ஆபத்திலிருக்கிறது. விளைந்துகிடக்கும் பருத்தியையும், கோகோவையும் என்ன செய்வதென்றும் புரியவில்லை. 'எங்கள் சிரமத்தை நீக்க பிரிடன் ஏதாவது செய்தால்தான் பிழைக்கலாம்."

இதற்காகத்தான் வில்லிங்டன் பிரபு தலைமைவகித்த பொருளாதார கோஷ்டி ஒன்று தென்-அமெரிக்காவுக்குப் போயிருக்கிறது. ஜெர்மனிக்குப் பதிலாக பிரிட்டனே ப்ரஸீல் விளைபொருள்களையெல்லாம் வாங்கிக்கொள்ளும்.

ஜெர்மனியே ஒப்புக்கொள்ளுகிறது.

மாதம் ஒன்றுக்கு 350,000-டன் நிறையுள்ள வியாபாரக் கப்பல்கள் சேதமாகிக்கொண்டுபோனால் பிரிடனுக்குத் தாங்கமுடியாதென்று நியூ-யார்க் டைம்ஸ் பத்திரிகை எழுதியிருக்கிறது. இதை ஆமோதித்து ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. இதிலிருந்து பிரிடன் நஷ்டம் 350,000-டன் கப்பல்களென்று ஜெர்மனி ஒப்புக் கொண்டதாகிறது. இதிலிருந்து, அக்டோபர், நவம்பர் மாதங்களில் 1,308,600-டன், அதாவது, சராசரி, மாதத்துக்கு 654,300-டன் கப்பல்களை உடைத்து விட்டதாக ஜெர்மனி கொடுத்த கணக்குப் பொய்யென்றாகிவிட்டது. நவம்பர் மாதத்திய முதல் சில வாரங்களில் 275,000-டன் கப்பல்களைச் சேதப்படுத்தியதாகச் சொன்னார்கள். அதில் பாதிதான் சரியான கணக்கென்று இப்பொழுது ஒப்புக்கொள்ளுகிறார்கள். உண்மையில், உடைந்தது இதற்கும் குறைந்த கப்பல்கள்தான்.

அச்சின் புதுக்கூட்டாளிகள்.

இப்பொழுது ஜென்ரல் அன்டொனெஸ்கு ஒரு புதுத்தலைவர் (பியூரர்) ஆகி அச்சுநாடுகளுக்குக் கூட்டாளியாயுமாயிருக்கிறார். அவர் பெருமையாக இப்பொழுது அச்சு நாடுகளில் 250,000,000 ஜனங்கள் கூடிவசிப்பதாகச் சொல்லுகிறார். ஆனால் இவர்களின் 7,000,000-பேர்கள் கொடுங்கோலால் அவஸ்தைப் படும் செக்கியர்கள், 17,000,000-கஷ்டப்படும் போல் மக்கள், 22,000,000 கஷ்டப்படும் கோரியர்கள் 5,500,000 (?) சைனக்காரர்கள் (பார்மோசாவில்) ஆக ஆபத்தில் 5 பேர்களுக்கு ஒருவர் வீதம், மொத்தம், அகப்பட்டுக்கொண்டவர்கள், 51,500,000 பேர்கள்.

பிரிடனிலும் சுயாட்சி அரசுபுரியும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலும், துருக்கி, கிரீஸ், இராக், யுனைடட் ஸ்டேட்ஸ் முதலிய தேசங்களிலும், சுயேச்சையையும், ஜனநாயகத்தையும் அடைந்திருக்கும் பிரிடிஷாரும், அவர் நேயர்களும் 253,000,000 பேர்கள். இவர்களோடு 450,000,000-சீனர்களையும் சேர்த்தால் பூமியில் மூன்றில் ஒரு பங்குக்குச்சரியானவர்கள் பிரிடிஷ் கூட்டாளிகளாயிருக்கிறார்கள்.

உத்தியோக முறையிலில்லாது சொந்த ஹோதாவில் பல்கேரியா அரசராகிய போரிஸ் என்பவர் ஹிட்லரை வந்து பார்த்துப்பேசியது அச்சுநாடுகளோடு பல்கேரியா வைத்திருக்கும் நட்பைக்காட்டுகிறதென்று ஜெர்மனி நவம்பர் 20-ல் ஒலிபரப்பியிருக்கிறது. ஆனால் பல்கேரியாவின் பிரதம மந்திரியும், அயல் நாட்டு மந்திரியும் பெர்லினுக்குப் போய்க்கொண்டிருப்பதாக ரோம் ரேடியோ சொன்ன செய்தியை இதாலியின் அதிகார வர்க்க சமாசார இலாகா மறுக்கிறது. கிரேக்கர்

கள் அடைந்திருக்கும் வெற்றியைக்கேட்டுப் புறப்பட்ட மந்திரிகள் போகாமலிருந்திருக்கலாம். இதிலிருந்து இதாலியச் செய்திகளை எதுவரையில் நம்பலாமென்று தெரிந்து கொள்ளலாம்.

ஸ்தோத்திரம் பலமாயிருக்கிறது.

நவம்பர் 18-ல் முஸோலினி செய்த பிரசங்கம் ஜெர்மானியர்களுக்கதிகத் திருப்தியை கொடுத்திருப்பதாக நவம்பர் 19-ல் ஜெர்மன் ஒலிபரப்புச் சொல்லுகிறது. இதற்கு இரண்டு காரணங்களுண்டு:—"வடகடலில் கப்பல் பழக்கங்கள் நடக்கும்போது நான் சென்று பார்க்க ஹிட்லர் அனுமதியைக் கேட்டிருக்கிறேன்' என்று முஸோலினி சொன்னதொன்று. "யுத்த தந்திரத்தில் ஹிட்லர் ஒரு அவதார புருஷன், ஜெர்மானியரின் உண்மையான பிரதிநிதி, தேசிய-சமத்துவ-அரசியலின் ஆதிகர்த்தா, புதிதாய் வரப்போகும் அரசியலுக்கடிப்படையானது" என்று முஸோலினி புகழ்ந்து பேசியது மற்றொரு காரணம்.

முன் ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசிய காலமெல்லாம் போய்விட்டது. 1934-ல் ஹிட்லர் சிறு மனிதனுயிருந்தகாலம்: அப்பொழுது முஸோலினி அவருக்கு மேலானவர்போல் அவரை ஆதரித்தார். அதே வருஷத்தில் டால்பஸை ஜெர்மானியர் கொலை செய்தபோது ப்ரென்னர் கால்வாய் வழிவந்து ஹிட்லரை எதிர்க்கப்போவதாக முஸோலினி ஹிட்லரைப் பயமுறுத்தினர். 1938-ல், பிரிடனுக்காகவும், பிரான்ஸுக்காகவும் ஹிட்லரோடு மியூனிக்கில் மத்தியஸ்தம் பேசினர். 1939-ல் இந்த யுத்தம் ஆரம்பித்தபோது முஸோலினியின் சகாயம் தேவையில்லையென்று ஹிட்லர் நிராகரித்தார். இப்பொழுது ஹிட்லரைத் தலைவராகக்கொண்டு அவர் தயவைத் தேடுங்காலம் வந்திருக்கிறது.

சக்கரவர்த்திப்பெருமானே நேராக விஜயம் செய்து நவம்பர் 21-ல் பார்லிமெண்டில் தன்னுடைய பிரஸங்கத்தைத் தானே செய்தாரென்றால் தாங்கள் ஏற்கனவே லண்டன் நகரமே அழிந்து போய்விட்டது என்று சொன்னது பொய்யாய் விடுமென்று பயந்து ஜெர்மன் ஒலிபரப்பு இந்தப் பிரசங்கம் சான்ஸலர் பிரபுவால் வாசிக்கப்பட்டதென்று பொய்ச்செய்தி விடுத்திருக்கிறது. ஆனால் உண்மையில் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினியோடு ஊர்வலம் வந்து, நேராகவே பார்லிமெண்டைத்திறந்து வைத்து, வழக்கம்போல் தன் பிரஸங்கத்தையும் தானே செய்தார். அந்தச்சமயத்தில் ட்யூக்-அப்-கெண்டும், ட்யூக்-அப்-கிளாஸ்டரும் பிரபுக்கள் சபையில் பிரசன்னமாயிருந்தார்கள்.

போட்ட திட்டப்படி பொய்கள்.

நவம்பர் 20—

ஜெர்மன் ரேடியோ:—"கொரிட்ஸாவுக்குத் தென் கிழக்கில் ஜயமென்று இதாலியர்கள் சொல்லுகிறார்கள்."

இதாலிய அறிக்கை:—"கிரேக்கர்கள் கொரிட்ஸாவைப் பலமுறை பலமாய்த் தாக்கினர்கள். ஆனால் எல்லா இடங்களிலும் ப்லத்த நஷ்டத்தோடு பின் தள்ளப்பட்டார்கள்".

நவம்பர் 21—

இதாலிய அறிக்கை:—"கொரிட்ஸா எல்லையில் கிரேக்கர்கள் பலமுறை எதிர்த்த தெல்லாம் தடுக்கப்பட்டது."

நவம்பர் 22—

இந்தத் தேதியில் இதாலிய அறிக்கையொன்றும் வெளிவரவில்லை. கிரேக்கர்கள் இங்கிலாந்தை வெறுப்பதாகமட்டும் இதாலி ஒலிபரப்பிற்று.
பகல் "இன்றுதான் கொரிட்ஸா டவுன்-ஹாலில் கிரேக்கக்கொடி நாட்டப்பட்டது."

நவம்பர் 23—

இதாலிய அறிக்கை :—"11-நாட்களாக கொரிட்ஸாவைப் பாதுகாத்து வந்த இரண்டு இதாலியச் சைன்யங்கள் ஊருக்கு மேற்கேயுள்ள ஸ்தலங்களுக்குப் பின் வாங்கின."

ஜெர்மன் ரேடியோ :—"இதாலியத் துருப்புகள் போட்ட திட்டப்படி புது இடங்களைப் பிடித்தன."

நவம்பர் 24—

"இந்தத் தினத்தில் போக்ராடெட்ஸ், மாஸ்கோபாலிஸ், கானிஸ்போல் என்ற இடங்களை கிரேக்கர்கள் கைவசப்படுத்திக் கொண்டார்கள்."

இதாலிய அறிக்கை:—"இதாலிய சைன்யங்களின் போக்குவரத்தைத் தடுக்க கிரேக்கர்கள் பிரயத்தனப்பட்டார்கள். அந்த முயற்சிகள் தடுக்கப்பட்டன."

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

எடுத்துக்காட்டாமலே பொய் வெளிப்படும்.

நவம்பர் 21—

இதாலிய ஒலிபரப்பு அராபியில்:—"இதாலிய விமானங்கள் எகிப்து நகரங்களைத் தகர்ப்பதாகக் கெய்ரோவிலிருக்கும் பிரிடிஷ் ரேடியோ சொல்லுகிறது. இது பொய். எகிப்துக்கு ஸ்வதந்திரம் கொண்டுவர இதாலி பிரிடனை எதிர்க்கிறது எகிப்திலுள்ள ஒரு பட்டணத்தையும் இதாலி எதிர்க்கவில்லை,

நவம்பர் 20—

துருக்கி ஒலிபரப்பு அராபியில்.—"நவம்பர் 17, 18, இரவில் அலெக்ஸாண்டிரியாவில் நடந்த இதாலிய விமான எதிர்ப்பில் பொது ஜனங்களில் 41-பேர்கள் கொல்லப்பட்டு, 70-பேர்கள் காயமடைந்தார்கள். சில வீடுகளும், ஒரு மசூதியும் உடைக்கப்பட்டன. கஷ்ட நிவாரணத்துக்காக பரூக் அரசர் 500-பவுன்கள் நன்கொடை கொடுத்திருக்கிறார்." இது எகிப்துஉள் நாட்டு மந்திரி விடுத்த செய்தி.

நவம்பர் 20—

இதாலிய ஒலிபரப்பு அராபியில்:—"இதாலிய விமானங்கள் அலெக்ஸாண்டிரியாவை எதிர்த்ததில் ஏதோ சிலர் இறந்ததைப்பற்றி பிரிடன் அனுதாபம் காட்டுவது கபட விசுவாஸந்தான்".

இந்த உபாயம் வழக்கத்தை ஒட்டியது.

இந்திய தேசீயக் கக்ஷிக்காரர்கள் ஸிந்து மாகாணத்திலுள்ள யுத்த தளவாட தொழிற்சாலைக்குள் பலாத்காரமாய் நுழைய, போலீஸ்காரர்களால் வெளிப்படுத்தப்பட்டார்களென்று நவம்பர்-18 இதாலிய ஒலிபரப்பு அராபியில் சொல்லுகிறது. ஸிந்திலாவது, இந்தியாவில் வேறு எங்கேயாவது இது நடக்கவில்லை. இந்தச்செய்தியை இந்துஸ்தானி ஒலிப்பரப்பிலும் சொல்லாததினால் இதெல்லாம் பொய்யென்பது வெளிப்படும்.

இந்தமாதிரியாகப் பொய் சொல்லுவது இதாலியருக்கு சகஜம். இதே மாதிரியாக மிஸ்டர் ஈடன் எகிப்துக்குப் போயிருந்தபோது பிரிடனுக்கு விரோதமாக எகிப்துக்காரர்கள் ஆரவாரம் செய்ததாக இந்துஸ்தானியில் சொல்லி, அராபியில் மறைத்து விட்டார்கள். அதற்குமுன் ஒரு தடவை பம்பாயில் இந்தியத் துருப்புகளுக்கும் பிரிடிஷ் துருப்புகளுக்கும் சண்டையேற்பட்டுக் கலகம் நடந்ததாக அராபியில் சொல்லி, ஹிந்துஸ்தானி ஒலிபரப்பில் மறைத்து விட்டார்கள்.

ரெட் கிராஸ் சங்கத்தாரின், சென்னையிலுள்ள—யுத்த உபசாதனங்கள்—பண்டசாலையின் உழைப்பு.

யுத்த நிலைமையிலிருக்கும் போர்வீரரின் கதி எவ்வாறென்பதை நேயர்கள் அறிந்துகொள்ள வேண்டியதவசியம். அநேகர் பற்பலவித சீதோஷ்ணங்களுள்ள இடங்களில் போர்புரிகின்றனர். இருதயமும் உறை பனிக்கட்டியாகும் என்பதுபோன்ற தாங்கமுடியாத குளிர்ந்த இடங்களில் வேறு கடற்படையாளர் அணி வகுக்கும்படி நேரிடுகிறது. குண்டு மாரிபோல் பெய்யும் போர்முனைகளில் காயப்பட்டும் உறுப்புகள் இழந்தும் குற்றுயிராயும் வருபவர் அநேகர். எதிரிகள் தாக்கும் பட்டணங்களிலிருந்து, தம் உயிருக்கஞ்சி, வீடு வாசல்கள் துறந்து உணவின்றி மற்றும் பட்டணங்களில் புகலிடம் தேடுவோரும் அநேகர். இப்படிப் பட்ட அனைவருக்கும் நம் சகாயம் தேவை. வேலை அதிகமன்றோ? மனம் இரங்கி, யாவரும் உதவிபுரிய எத்தனை ஆயிரம் கைகளும் தேவையே. ஸெயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் ஆர்கனேஸேஷன், ரெட்கிருஸ்,—என்னும் சங்கங்கள், யுத்தகாலத்தில் நிலைப்படையாளர் பாதுகாப்பின் சேவையரோடு, இணங்கி, உதவி புரிந்து வருகின்றனர். அவர்களுடன் சேர்ந்து வியாதியஸ்தர்களையும், காயப்பட்டோரையும் பராமரிக்கும் வேலையுடன், போர் வீரருக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து வருகின்றனர். தவிர, இந்த யுத்தத்தில் ஆகாயவிமான வெடி வீச்சினால், வீடற்றுப்போகும் குடிகளுக்கும் அடைக்கலம் புகுந்தவர்க்கும், பரிகாரம் செய்து வருகிறார்கள். ஆதரவளிக்கும், இவ்வேலையில் மதராஸ் சங்கமும் தீவிரமாய்ச் சேர்ந்துகொண்டது. டில்லி கமிட்டியாரும் ரூ. 6,000 முன்பணமாய்க்கொடுத்து உதவினார்கள்.

ஆஸ்பத்திரியில் உபயோகிக்கும் உடுப்புகள், பின்னல் உடுப்புகள், உபகருவிகள் முதலியவைகள் அனுமானிக்கப்பட்ட அளவின்படியும் திட்டவட்டமாயும், செய்துமுடிக்க பற்பல தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்படிப்பட்ட வேலைகளைப் படிப்பிக்க, தேர்ச்சிபெற்ற ஓர் அம்மையாரையும் நியமித்திருக்கின்றது. சென்னையில் ஒரு மாதத்திற்குள் 20 நிலயங்களும் இதர ஜில்லாக்களில் அநேகமும் ஏற்படுத்தப்பட்டன. சகல ஜாதியாரும் இந்த வேலைகளை அன்புடன் செய்துவருகிறார்கள். பள்ளிக்கூட பையன்கள் கைகால் முறிவில் உபயோகிக்கும் மரத்துண்டுகளைச்செய்து அனுப்பிவருகிறார்கள். அனுமதிக்கப்பட்ட மாதிரிகளும், குறிப்புகளும், தேவையான பொருள்களும், ஆங்காங்கு உள்ள தொழில் நிலயங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஜில்லாக்களில் இவ்வித வேலைகளுக்கு வேண்டிய சாமான்களை சிலர் தாமே வாங்கிக் கொண்டபோதிலும், அநேகமாய், யுத்தநன்கொடை கூட்டுறவு கமிட்டியார் வாங்கி அனுப்புகிறார்கள். ரெட் கிராஸ் கிளைச்சங்கம் இல்லாத இடங்களான, திருவாங்கூர், கொச்சின் முதலிய ஊர்களுக்கும், சென்னை சங்கத்தினர் தாமே வாங்கியனுப்புகிறார்கள்.

தென் இந்திய ரெயில்வே கம்பெனியாரும், மதருஸ் தென்மராட்டா ரெயில்வே கம்பெனியாரும், நமது வேலையின் சார்பாய் அனுப்பப்படும் சகல சிப்பங்களையும் இலவசமாய் எடுத்துச் செல்லுகின்றனர். மற்ற அநேக கம்பெனியாரும், ரெட் கிராஸ் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கி சகல உதவியும் புரிந்துவருகின்றனர்.

இதில், சகல உழைப்பாளிகளும் சம்பளமின்றி, சுயேச்சையாய்ச் சேவிக்கின்றனர். யுத்த உபசாதனங்கள் பண்டசாலையை நடத்தும் அம்மையாருக்கு அதிக வேலையுண்டு. பரிவுடன் அவருடன் உழைப்போர் அநேகருண்டு. வந்து சேரும் சாமான்களைப் பிரித்தெடுக்கவும், கட்டவும், சேர்த்து வைக்கவுமான வேலைகள் அதிகமுண்டு. தன்னைக்காப்பவருக்கு இந்தியா அனுப்பும் இனும் ஜாபிதாவிற்கு யுத்தம் நடந்து, இந்த ஒரு ஆண்டு முடிவில், ரெட் கிராஸ் சங்கம் கீழ்க்கண்டவாறு நன்கொடைகள் கொடுத்திருக்கிறது.

வைத்தியசாலைகளுக்குச் செய்யப்பட்ட உருப்படிகள் ...	8,893
பின்னின உருப்படிகள்	674
காயம் கட்ட உதவும் உருப்படிகள்	62,257
துருப்புகளுக்குச் சகாய உருப்படிகள் பின்னினவை ...	10,190
பிரயோஜனமான இனும் உருப்புகள் ...	3,330
சிகரட், பீடி முதலிய அல்லாத உருப்புகள் ...	55,890
மிட்டாய் தினுசுகள்	12 டின்கள்.
ராஜாங்க இந்திய கப்பல் படையார்க்கு பின்னல் உருப்படி. ...	237

இன்னமும் கொடுத்தனுப்ப 50 பெட்டிகள் தயாராயிருக்கின்றன. அவசரத்திற்கு உதவியாகவும், அநேக உருப்படிகள் இங்கும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன.

நன்கொடைகள், பின்வரும் ஸ்தலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

1. மத்திய கீழ்ப்பிரதேசங்களிலுள்ள துருப்புகளுக்கும், வைத்தியசாலைகளுக்குமாய் பம்பாய் உதவி ரெட் கிராஸ் கமிஷனருக்கு அனுப்பி இருக்கிறது.
2. தி பிரிடிஷ் ரெட் கிராஸ்—லண்டன்.
3. ராஜாங்க இந்திய கப்பல் படைத்தலைவர்—பம்பாய்.
4. லண்டனிலுள்ள இந்தியர் சௌக்கியத்திற்காக ஏற்படுத்தியிருக்கும் நிதிக்கும்.
5. ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டை, காசிமோட், மூன்ருவது மதருஸ் பேட்டரி, என்னும் துருப்புகளின் தலைவர்களுக்கு.

6. இந்தியப் பகுதி—காரியதரிசி—ஜெனரல் ஆஸ்பத்திரி—பம்பாய்.

7. மலைப்படையாளான இந்தியத் துருப்புகள்—மொம்பாசா, ஆபிரிக்கா.

கொஞ்சமும் தாமதிக்காது நடைபெற வேண்டிய இந்த ஊழியத்துடன், காயப்பட்டுள்ள போர்வீரர் இங்குவருகிற வேளையில், அவர்களை ஆதரிக்கும் வேலையும், வளர்ச்சிபெற வேண்டியதிருக்கலாம்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1940—

பிரஸங்கம் XXII.

						மணி.
டிஸம்பர்	9,	திங்கட்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
	10,	செவ்வாய்க்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.		,,	5.00
			பொன்னமராவதி	...	,,	5.30
			கீழாநிலை	...	,,	5.30
			பூவரசகுடி	...	,,	5.30
	11,	புதன்கிழமை ...	ராங்கியம்	...	,,	5.30
	12,	வியாழக்கிழமை ...	திருவப்பூர்	...	,,	5.00
			ஆதனக்கோட்டை	...	,,	5.30
			விராலிமலை	...	,,	5.30
			அன்னவாசல்	...	,,	5.30
	13,	வெள்ளிக்கிழமை...	கரம்பக்குடி	...	,,	5.30

பிரஸங்கம் XXIII.

14,	சனிக்கிழமை ...	டவுன் ஹால்	...	மாலை	6.30
15,	ஞாயிற்றுக்கிழமை.	வயலோகம்	...	காலை	9.45
		கோட்டைக்காடு	...	காலை	9.45
16,	திங்கட்கிழமை ...	பெருங்களூர்	...	மாலை	5.00
		அரிமளம்	...	,,	5.00
17,	செவ்வாய்க்கிழமை.	திருக்கோகர்ணம்	...	,,	5.30
		சேரி பள்ளிக்கூடம்	...	,,	5.30
		குடுமியாமலை	...	,,	5.30
		காரையூர்	...	,,	5.30
19,	வியாழக்கிழமை ...	பனையப்பட்டி	...	,,	5.30
20,	வெள்ளிக்கிழமை...	கோனாபட்டு	...	,,	5.00

இந்தியாவின்

பாதுகாப்புக்கு உதவுங்கள்

பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவறாமல் வாங்குங்கள்.

ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன்மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்த்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.

பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.

பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு 3¼ ரூபாய் விதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது.
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—9-12-40.